பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 27, செவ்வாய்க்கிழமை 12.09.2017 கதிர் 310

## நவ.19 இல் உருவாகியது செப்.21 இல் வெளியாகிறது

### இடைக்கால அறிக்கையின் ‘கர்ப்ப’காலம்

கொழும்பு, செப்.12

“புதிய அரசமைப்புக்கானஇடைக்காலஅறிக்கை கடந்த வரும் நவம்பர் 19 ஆம் திகதியே உருவாக்கப்பட்டு விட்டது. ஆனால் நீண்ட இழுபறிக்குப் பின்னர் இப்போது செப்ரெம்பர் 21ஆம் திகதிதான் – பத்து மாதம் கழித்துத் தான் – அது நாடாளுமன்றத்துக்கு வருகின்றது.

இவ்வாறு கூறினார் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற பக்கம் 18

## வன்னி விபத்துக்களில் 2 பெண்கள் உயிரிழப்பு!



கிளிநொச்சி, செப்.12

வன்னியில்இடம்பெற்ற இரு வேறு விபத்துச் சம்பவங்களில் இரு பெண்கள் பலியாகியுள்ளனர்.

கிளிநொச்சி – பூநகரிப் பகுதியில் நேற்று வாகனம் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணொருவர் உயிரிழந்தார். வாகனத்தில் பயணித்த ஏனையோர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

பரந்தன் – பூநகரி வீதி பக்கம் 18

### பொறுப்புக்கூறல் விவகாரம்

# இலங்கையின் தாமதம் சர்வதேச விசாரணையை அவசியப்படுத்துகிறது!



### ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேற்று ஜெனீவாவில் விசனம் தெரிவிப்பு

ஜெனீவா, செப்ரெம்பர் 12

இலங்கையில் சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்டமை பற்றிய குற்றச்சாட்டுகள் தொடர்பில், பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்கு நம்பகரமான செயற்பாடுகள் இல்லாமை இந்த விடயத்தில் சர்வதேச நியாயாதிக்கத்தின் செயல் தேவையை மேலும் அவசியப்படுத்துகின்றது.

- இவ்வாறு ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் புதிய கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அதன் ஆணையாளர் சையிட் ராட் அல் ஹூசைன் நேற்று வலியுறுத்திக் கூறினார். பக்கம் 18

# 20ஆவது திருத்தத்துக்கு கூட்டமைப்பு முழு ஆதரவு

### உயர் நீதிமன்று அனுமதித்தால் பத்து நாள்களில் நிறைவேறும்

யாழ்ப்பாணம்,செப்ரெம்பர் 12

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தில், தாம் எதிர்பார்த்த மாற்றங்களை எல்லாம் செய்வதற்கு அரசு இணங்கிவிட்டமையால் அதனை ஆதரிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்திருக்கின்றது என அதன் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்த அரசமைப்புத் திருத்தத்துக்கு உயர் நீதிமன்றத்தின் அனுமதி கிடைக்குமானால் அடுத்த பத்து நாள்களுள் இதனை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. பக்கம் 18

### 20 ஆவது திருத்தத்துக்கு

# அங்கீகாரம்!

### கிழக்கு, மேல் மாகாண சபைகளில்

கொழும்பு, செப்.12

மாகாணசபைத்தேர்தல்கள்தொடர்பானஅரசமைப்பின் இருபதாவது திருத்தத்துக்கு கிழக்கு மாகாண சபையும், மேல் மாகாண சபையும் அங்கீகாரம் அளித்தன.

மாகாண சபைகள் மட்டத்தில் பெரும் சர்ச்சையையும் அதிருப்தியையும் ஏற்படுத்திவந்த – அரசமைப்புக்கான – இருபதாவது திருத்தம் தொடர்பில் பல தரப்புகளும் எதிர்பார்த்த மாற்றங்களைச் செய்வதற்கு அரசுத் தலைமை இணங்கியது.

இதனை அடுத்து, மாகாணசபைகள்மட்டத்தில் பக்கம் 18

## சர்வஜன வாக்கெடுப்புக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டால் 20ஆவது திருத்தம் ‘அவுட்’!

கொழும்பு,செப்.12

அரசமைப்புக்கான இருபதாவதுதிருத்தம் இனி முன்நகர்த்தப்படுவதும் கைவிடப்படுவதும் உயர் நீதிமன்றத்தின் பரிந்துரையில் தங்கியிருப்பதாகக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டில் உள்ள சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரே சமயத்தில் நடத்துவதற்கு வழி செய்யும் ஏற்பாடுகளைச் செய்யவும் –

தற்போது இணக்கம் காணப்பட்டுள்ள விகிதாசாரப் பிரதிநித்துவ முறை மற்றும் தொகுதி வாரித் தெரிவு முறை ஆகியவை பக்கம் 18




## வடக்கில் 6 பேருக்கு இந்த வருடம் எய்ட்ஸ்!

### மேலும் பலருக்கு இருக்கலாம் எனச் சந்தேகம்

யாழ்ப்பாணம்,செப்.12

வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் புதிதாக 6 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என இனங்காணப்பட்டுள்ளது. அதில் மூன்று பேர் அண்மையில் உயிரிழந்துள்ளதாக யாழ்போதனாவைத்தியசாலை பாலியல்தொற்றுநோய் தடுப்பு சிகிச்சை பிரிவின் பொறுப்புவைத்திய அதிகாரி திருமதி தாரணி குருபரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் கடந்த 1987ஆம்ஆண்டில் பக்கம் 18

# உள்ளூராட்சித் தேர்தல் ஜனவரி 20ஆம் திகதி!

### தேர்தல் ஆணையம் விரைவில் அறிவிக்குமாம்

கொழும்பு, செப்.12

நாடு முழுவதிலும் உள்ளூராட்சித் தேர்தலை ஒரே நாளில் – எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி – நடத்துவதற்கு தேர்தல்கள் திணைக்களம் தயாராகி வருகின்றது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டம் நிறைவேறியுள்ள நிலையில் இனிமேல் அத்தேர்தலைப் பிரகடனப்படுத்தி அதனை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணையகத்தினுடையதாகும்.

இந்தப் பின்புலத்தில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது தொடர்பாகப் பக்கம் 18

## 4 நாள்களுக்கு சுழற்சி முறையில் டாக்டர்கள் வேலை நிறுத்த முஸ்தீபு

### யாழ்., கிளிநொச்சி, முல்லை., மன்னாரில் இன்று

கொழும்பு,செப்.12

‘சைட்டம்’ பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதி வரை 4 நாள்களுக்கு மாவட்டங்கள் சிலவற்றில் தாங்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி இன்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்னறுவை, மட்டக்களப்பு, நுவரெலியா பக்கம் 18

### முதலமைச்சரின் கீழான காணி அமைச்சுக்கு தெரியாமல்

# வனத் திணைக்களத்தினர் மக்களின் காணிகளை எல்லையிட முடியாது!



வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு



வவுனியா, செப். 12

முதலமைச்சரின் கீழான காணி அமைச்சுக்கு தெரியாமல் வனத் திணைக்களத்தினர் மக்கள் காணிகளை எல்லையிடமுடியாது என வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதுடன் வன திணைக்களத்தினர் முதலமைச்சரின் காணி அமைச்சுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

மக்கள் குடியிருக்கும் காணிகளில் வனதிணைக்களத்தினர் எல்லைக்கற்களைஇட்டு காணிகளை கையகப்படுத்த முடியாது.

வவுனியா மாவட்டத்தின் புதிய வேலர் சின்னக்குளம், சூடுவெந்தபுலவு, மூன்று முறிப்பு, கொல்லர்புளியங்குளம் ஆகிய பகுதிகளில் மக்கள் வாழிடங்கள் மற்றும் அவர்களது பயிர்ச்செய்கை நிலங்களைவனதிணைக்களத்தினர் தமது காணிகளாக எல்லைப்படுத்தி வருகின்றனர் எனவும் இதனால் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்எனவும்வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்சிவசக்தி ஆனந்தன் ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

இதனை இணைத்தலைவரான அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாணசபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோரும் இதே கருத்தைத் தெரிவித்தனர்.

இதனையடுத்து இது தொடர்பாக வனத் திணைக்களத்தினரிடம் பதில் கேட்டபோது - தாம் மக்களது காணிகளை எல்லையிடவில்லை எனவும், மக்கள் தமது காணி தான் என்பதை வெளிப்படுத்தினால் தாம் அதனை விடுவிப்பபார் எனவும் வனத் திணைக்கள அதிகாரி ரவீந்திரன் தெரிவித்தார்.

இதற்கு அமைவாக மக்களது காணிகளைக் கையகப்படுத்த முடியாது எனவும், அவர்கள் காணிகளை எல்லையிட செல்கின்றபோதுவடக்குமுதலமைச்சரின் கீழான காணி அமைச்சுக்கு தெரியப்படுத்த வேண்டும் எனவும் அந்தந்த பிரதேச செயலாளருடன் இணைந்தே வனத்திணைக்களத்தினர் காணிகளுக்கு எல்லையிட வேண்டும் எனவும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## சுகாதார தொண்டர்கள் நியமனம் தொடர்பில் உறுதி வழங்கவில்லை என்கிறார் குணசீலன்!

வவுனியா, செப். 12

ஒரு மாதத்தில் தீர்வை பெற்றுத் தருவேன் என சுகாதாரத் தொண்டர்களுக்குத் தான் உறுதிமொழி வழங்கவில்லை என வட மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்தார்.

வவுனியா ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுகாதாரத் தொண்டர்களின் போராட்டத்திற்கான தீர்வு தொடர்பாக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வினவினார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சுகாதாரத் தொண்டர்கள் 180 நாள்களுக்கும் மேலாக நிரந்தர நியமனத்திற்காகப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.



அவர்களுக்குத்தீர்வைப்பெற்றுக் கொடுக்க நான் முயற்சித்துள்ளேன். எனினும், சில ஊடகங்களில் வந்தது போல் ஒரு மாதத்தில் தீர்வைப் பெற்றுத் தருவேன் எனக் கூறவில்லை.

இதற்கான தீர்வை மத்திய அரசே தரவேண்டும். பல சுகாதாரத் தொண்டர்கள் இவ்வாறு தொழில்வாய்ப்பு கேட்டுள்ளார்கள் இவர்கள் பல துறைகளைச் சேர்ந்தவர்கள்.

எனவே, இவர்களுக்கான நியமனத்தை வழங்க வேண்டும் என மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அதற்கான நடைமுறைகள் இடம் பெறுகின்றன.

எதிர்வரும் சில நாள்களில் நிதி அமைச்சரைச் சந்திக்கவுள்ளேன். இதன்போதும் சுகாதாரத் தொண்டர்களின் நியமனம் தொடர்பாக கலந்துரையாடுவேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-100)

## கட்டடத்திலிருந்து குதித்து தற்கொலை செய்த நோயாளி!

கொழும்பு, செப். 12

அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் விரிவுரை பிரிவு இயங்கும் 6 மாடி கட்டடத்தில் இருந்து குதித்து நோயாளி ஒருவர் நேற்றுக் காலை தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நான்காவது மாடியில் தங்கி சிகிச்சை பெற்று வந்த 57 வயதான நோயாளியே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

மினுவங்கொடை - கலஹாகொடை பிரதேசத்தை சேர்ந்த இந்த நோயாளி வயிற்று வலி காரணமாக கடந்த சனிக்கிழமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பாக கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அனுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புதிய தூதுவர் மூவர் நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மைத்திரியிடம் கையளித்தனர்!

கொழும்பு, செப். 12

இலங்கைக்கான மூன்று புதிய தூதுவர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தமது நியமனக் கடிதங்களை கையளித்தனர்.

எஸ்டோனியா குடியரசு, பெரு குடியரசு மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்களே தமது நியமனக் கடிதங்களைக் கையளித்தனர்.

ரிஹோ குரூ எஸ்டோனியா குடியரசின் தூதுவர், ஜோர்ஜ்



ஜுவான் கஸ்டனிடா மெண்டிஸ் பெரு நாட்டின் தூதுவர், சுலாமனீ சார்ச்சுவான் தாய்லாந்து தூதுவர் ஆகியோரே தமது நியமனக் கடிதங்களைக் கையளித்தனர்.

சிறந்த நட்புறவுகளைபேணி வரும் நாடுகள் தமக்கிடையே உறுதியான நீண்ட கால இருதரப்பு உறவுகளை உறுதி செய்வதற்கு பொருளாதார கூட்டுறவை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தூதுவர்களிடம் தெரிவித்தார்.

நட்பு நாடுகளுடன் பலமான பொருளாதார உறவுகளை பேணுவதற்கு இலங்கை விரும்புவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, வர்த்தகம், முதலீடு மற்றும் சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு கூட்டுறவை மேலும் பலப்படுத்துவதற்கு புதிய தூதுவர்கள் அர்ப் பணிப்புடன் செயற்படுவார்கள் என்று தான் நம்புகிறார் எனவும் தெரிவித்தார்.

அமைச்சர் திலக் மாரப்பன, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின்பெர்னாண்டோ, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தனர்.

# காணாமலாக்குதலைக் குற்றமாக்கும் சட்டமூலம் 21 இல் நாடாளுமன்றுக்கு!

யாழ்ப்பாணம், செப். 12
வலிந்து காணாமலாக்கு கின்றமையைக் குற்றமாகப் பிர கடனப்படுத்தி அதற்குரிய தண் டனையை வழங்குவதற்கு வழி செய்யும் சட்ட மூலம் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை நாடாளுமன்றுக்கு வருகின்றது.

அன்றைய தினம் காலை 9.30 மணி முதல் 10.30 மணி வரை நாடாளுமன்றம் அரச மைப்பு உருவாக்கத்துக்கான பேரவையாகக் கூடும். அப்போது அரசமைப்பு உருவாக்கத்துக் கான வழிநடத்தல் குழு இவ்விட யம் தொடர்பாக சமர்ப்பித்துள்ள இடைக்கால அறிக்கை பரி சீலனைக்கு எடுத்துக்கொள் ளப் படும்.

அந்த நிகழ்ச்சி நிரல் முடிந்த பின்னர் – காலை 10.30 மணிக் கும் பின்பு – நாடாளுமன்றம் தனது வழமையான விடயங் களைக் கையாள்வதற்காக மீண் டும் கூடும்.

அப்போதே வலிந்து காணம லாக்குவதைக் குற்றமாக்கும் சட் மூலம் சபையில் சமர்பிக்கப் படும்.

காணாமல் போனோர் தொடர் பான அலுவலகத்தைத் திறப் பதற்கான சட்டமூலம் நாடாளு மன்றில் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும் அந்த அலுவலகத்தை ஆரம்பிப்பதற்கான முன் முயற்சி கள் இன்னும் எடுக்கப்படவே யில்லை.

வலிந்து காணாமலாக்கு கின்றமையை இலங்கையில் ஒரு குற்றமாகப் பிரகடனப்படுத் தும் சட்டம் வராமல், இந்தக் காணாமல் போனோருக்கான அலுவலகம் செயற்பட்டாலும் அது பயனற்றது என்று சுட்டிக் காட்டப்பட்டு வந்தது.

அந்தப் பின்புலத்திலேயே இந்தச் சட்டம் இப்போது வரு கின்றது.

"யுத்த காலத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பான பொறுப் புக் கூறல் விவகாரத்தில், விசா ரணை, விசாரணை என நாம் அவசரப்படுகின்றோம். ஆனால் அந்தப் பொறுப்புக் கூறல் விட யத்தில் சர்வதேச பட்டயங்கள், பிரகடனங்கள் பலவற்றில் குற்ற மாகச் சுட்டிக்காட்டப்பட்ட விடயங் கள் பல இங்கு குற்றமாக இது வரை அறிவிக்கப்படவில்லை. அவற்றைக் குற்றமாக்கும் விதத் திலான சட்டங்களை நாம் முத லில் இங்கு உருவாக்கினால் தான் அந்தச் செயல்களைப் புரிந்தோருக்கு எதிராக நாம் நட வடிக்கை எடுக்கலாம்; அவர் களைத் தண்டிக்கலாம்.

"அத்தகைய சட்டங்களில் ஒன்றே வலிந்து காணாமலாக்கு வதைக் குற்றமாக்கும் சட்ட மூலம்." – என்று நேற்று தாம் யாழ்ப்பாணத்தில் தமது இல்லத் தில் நடத்திய செய்தியாளர் மாநாட் டில் கூட்டமைப்பின் பேச்சாள ரும் யாழ். மாவட்ட எம்.பியு மான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் தார். (உ)

## உமையாள்புரத்தில் நேற்றிரவு காரைப் பந்தாடிய சொகுசு பஸ்



நேற்றிரவு 9.30 மணியள வில் பரந்தனுக்கும் ஆனை யிறவுக்கும் இடையில் உமை யாள்புரத்தில் பகுதியில் இடம் பெற்ற விபத்தில் பலத்த சேதம டைந்த காரையே படத்தில் காண் கிறீர்கள்.

அப்பகுதியில் பழுதடைந்த வாகனம் ஒன்றுக்கு உதவுவதற் காக இந்தக் காரின் உரிமை யாளர் மேற்படி வாகனத்துக்குப் பின்னால் தமது காரை நிறுத்தி விட்டு, முன்னால் உள்ள அந்த வாகனத் திருத்தல் பணிக்கு உத விக் கொண்டிருந்தாராம்.

நிறுத்தல் தரிப்பு வெளிச்ச சமிக்ஞையின்றி இருட்டில் நிறுத் தப்பட்டிருந்த காரை யாழ்ப் பாணத்தில் இருந்து நேற்றிரவு பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசு பஸ் ஒன்று மோதிப் பந்தாடியதில் கார் சிதறிச் சேதமடைந்தது. எனி னும் பஸ்ஸுக்குப் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை.

தெய்வாதீனமாக யாருக்கும் காயமோ பாதிப்போ ஏற்பட வில்லை. (உ)

## லலித் வீரதுங்கவுக்கு எதிரான தீர்ப்பு: நேற்று மேன்முறையீட்டு மனுத் தாக்கல்!

கொழும்பு, செப். 12
'சில்' துணி விநியோக குற்றச் சாட்டில் முன்னாள் ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக் குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்கு 3 வருடச் சிறை உட்பட பல தண்டனைகள் விதித்து கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் வழங் கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் தரப்பு சட்டத்தரணி களினால் நேற்று பிற்பகல் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த மேன்முறையீட்டு மனுதாக்கல் செய்யப்பட்டது.

## கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி மஹிந்தோதயா ஆய்வுகூடத்தில் தீ!

கிளிநொச்சியின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றான முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியின் மஹிந்தோதயா ஆய்வு கூடத்தின் தகவல் மற்றும் தொடர்பாதன தொழிநுட்ப மத் திய நிலையப் பகுதியில் மின் ஒழுக்கு ஏற்பட்டமை காரணமாக நேற்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

பாடசாலை நேரத்தில் இந்த விபத்து நிகழ்ந்தமையால் மாண வர்கள், மற்றும் ஆசிரியர்கள் இணைந்து பிரதான மின்வழங் கும் பகுதி ஆழியை நிறுத்தி தீயை அணைத்து விபத்துப் பாதிப்பைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த விபத்தினால் கணினி கள் சிலவும், குளிரூட்டி இயந் திரம், தளபாடங்கள் என பல லட் சம் ரூபா பெறுமதியான சொத்துக் கள் அழிவடைந்துள்ளன.

மஹிந்தோதயா ஆய்வுகூடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பாடசாலைகளுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது

## வெடிபொருள்கள் பெருமளவில் கிளிநொச்சிப் பகுதியில் மீட்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் யுத் தத்திற்கு பின்னர் ஆறு லட்சத்து 62 ஆயிரத்து 839 வெடி பொருள்கள் அகற்றப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு 2011 ஆம் ஆண்டு கண்ணிவெடி அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை ஆறு இலட்சத்து 62 ஆயிரத்து 839 வெடிபொருள்கள் அகற்றப் பட்டுள்ளன என மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிமாவட்டமுழுவதும் பல்வேறுபிரதேசங்களில் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகள் பல நிறுவனங்களால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

இவைகளால் இதுவரைக்கும் மிதிவெடிகள், வாகன வெடிகள், சிறிய ரக வெடிபொருள்கள், வெடிக்காத வெடிபொருள்கள் என்பனவே மீட்கப்பட்டுள்ளன.

## பலாலிப் பகுதியில் மாயமான சிப்பாயின் துப்பாக்கி மீட்பு

பலாலி படைத்தலைமையகத் தில் காவல் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் காணாமற் போயுள்ள நிலையில் அவரிடமிருந்த துப்பாக்கி மற்றும் மகசீன் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அங்குள்ள காவலரணில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் நேற்றுமுன்தினம் அதி காலை முதல் காணாமல் போயி ருந்தார். மாற்றுக் கடமைக்கு மற் றொரு சிப்பாய் சென்றபோதே இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டது.

இராணுவச் சிப்பாயுடன் அவ ரின் துப்பாக்கியும் காணாமற் போயிருந்தது என்று கூறப்பட்ட நிலையில் தற்போது துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

காணாமற் போயுள்ள சிப்பாய் பற்றிய விவரங்களை இராணுவத் தினர் வெளியிடவில்லை. சிப்பா யைத் தேடும் பணிகள் நடைபெறு கின்றன என்று கூறப்படுகின்றது.

## மாத்தறை நீதிவான் நீதிமன்ற ஆவண அறையில் திருட்டு!

மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தின் வழக்கு ஆவணங்கள் வைத்திருக்கும் அறைக்குள் கள்வர்கள் நுழைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்றுக் காலை தமக்கு முறைப்பாடு கிடைத்ததாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் கள்வர்கள் எப்போது நுழைந்தார்கள் என்பது தெரிய வில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வழக்கு ஆவண அறையில் உள்ள ஆவணங்கள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

அந்தப் பகுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன எனக் கூறப்பட்டது.

## மூதூரில் புவியதிர்வு

கொழும்பு, செப். 12
கிழக்கு மாகாணம், திருகோண மலை மாவட்டம், மூதூர் பகுதி யில் நேற்றிரவு 8.45 மணியள வில் இலேசான புவியதிர்வு ஒன்று உணரப்பட்டுள்ளதாக அங்கி ருந்து கிடைத்த செய்திகள் தெரி வித்தன. (உ)

## யோஷிதவுக்கு மீண்டும் அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்ஷ வுக்கு நிதி மோசடி விசாரணைப் பிரிவில் இன்று ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கல்கிசை மற்றும் இரத்ம லானை பகுதிகளில் காணிகளை கொள்வனவு செய்தமை மற்றும் ஆடம்பர வீடொன்றை நிர்மாணிப் பதற்காகப் பணம் பெற்றுக்கொள் ளப்பட்டமை தொடர்பில் வாக்கு மூலம் பெறுவதற்காகவே அவ ருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

## கைக்கோடரி வாளுடன் இருவர் கைது

மானிப்பாய் – கட்டுடைப் பகுதி யில் ஒருவரை வெட்டுவதற்கு எடுத்துச் சென்ற கைக்கோடரி மற்றும் வாளுடன் இரண்டு இளை ஞர்களை மானிப்பாய் பொலி ஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். கைதான நபர் கள் இருவரும் அதே பிரதேசத் தைச் சேர்ந்த 18, 20 வயதுடைய இளஞர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது. தனிப்பட்ட பிரச்சினை ஒன்றிற்காக இளைஞன் ஒரு வரை இவர்கள் இருவரும் வெட்டு வதற்கு முயற்சி செய்தனர் எனப் பொலிஸார் கூறினர்.

இவர்கள் 'மொட்டைசிவா, கெட்டசிவா' குழுவைச் சேர்ந்த வர்கள் எனக் கூறப்படுகிறது. கைதான இரண்டு இளைஞர் களையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## தனது உத்தரவில் நடந்ததுக்கு வீரதுங்கவுக்குத் தண்டனையா?

### விசனப்படுகிறார் மஹிந்தர்

கொழும்பு, செப்.12
தனது உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யொன்றுக்காக முன்னர் தனக்கு செயலாளராக விருந்த லலித் வீரதுங்கவும், அனுஷ பல்பிட்ட வும் வீணாகத் தண்டனை அனுபவித்து வருகின்றனர் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசனம் தெரிவித்துள் ளார்.

'சில்' ஆடை விநியோகிப்பது தவறான செயல் அல்ல. இருப் பினும், இதனைத் தேர்தல் காலத் தில் செய்ததுவே தண்டனை வழங்கக் காரணமாக அமைந் துள்ளதாகவும் மஹிந்த ராஜ பக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவும் கூட்டு எதிரணியின் எம்.பிக்கள் பலரும் நேற்று வெலிக்கடைச் சிறைச் சாலைக்கு சென்று லலித் வீர துங்க, அனுஷ பல்பிட்ட ஆகியோ ரின் சுக துக்கம் விசாரித்தனர். அதன் பின்னர் ஊடகவியலாள ருக்குக் கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சாபத்துக்கு இடி விழாதா?

அமைச்சர் சரத் பொன்சேகா தலை மீது இடி விழ வேண்டும் என்று சபித்திருக்கின்றார் முன்னாள் அமைச்சரும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனக பண்டார தென்னக்கோன்.

"அமைச்சர் சரத் பொன்சேகா, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய குறித்துக் கூறிய கருத்துகள் கீழ்த்தரமான கதை. வடக்கு முதலமைச்சரின் தேவைக்காக பொன்சேகா இதனைக் கூறியுள்ளார். இவ்வாறான பாவப்பட்ட நபர் பிறந்தமை குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

"பொன்சேகா தலை மீது இடி விழ வேண்டும் என்று மக்கள் கூறுகின்றார்கள். அவர் மீது இடி விழாவிட்டாலும் இடி ஒன்றைச் செய்தாவது பொன்சேகா மீது விழச் செய்ய வேண்டும்." - என்று சாபமிட்டிருக்கின்றார் ஜனக பண்டார தென்னக்கோன் எனக் கூறப்படுகின்றது.

அரசியல் விநோதங்கள் எவ்வளவு தூரம் வார்த்தைப் பிரயோகங்களை வெளியிட வைத்திருக்கின்றன என்பதை நோக்கும் போது அழுவதா அல்லது சிரிப்பதா என்று புரியவில்லை.

இன்றைய பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஜெனரல் பொன்சேகாவாக - இராணுவத் தளபதியாக - இருந்த சமயம், இதேபோன்ற இடி ஒன்றைத்தான் இராணுவத் தலைமையக வாசலில் வைத்து அவர் மீது இறக்கினார்கள் விடுதலைப் புலிகள். அவரது வாகன அணிக்கு அருகில் மெய்பாதுகாவலராக மோட்டார் சைக்கிளில் வந்த உதவியாளர் முந்திக் கொண்டு பாய்ந்து, அந்தத் தற்கொலைத் தாக்குதல் பெண்ணை தனது மோட்டார் சைக்கிளினால் இடித்து, அந்த இடியைத் தான் வாங்கிக் கொண்டமையால் குற்றுயிரில் அப்போது தப்பிப் பிழைத்தார் ஜெனரல் பொன்சேகா.

அந்த இடி விழுந்த போது அவருக்காகத் துடித்த தென்னிலங்கை, இப்போது யுத்தப் பிரதேசத்தில் நடைபெற்ற உண்மைகளில் ஓரிரண்டு குறித்து அவர் வாய் திறக்க முயன்றதும் அவர் மீது இடி விழ வேண்டும் என்று சாபமிடுகின்றது.

தமிழரைக் கொன்றொழித்த பாவத்தை மூடி மறைப்பதில் - உண்மைகள் அம்பலமாகி விடாமல் புதைப்பதில் - தென்னிலங்கை எவ்வளவு தீவிரமாக இருக்கின்றது என்பதற்கு அரசியல்வாதிகளின் இத்தகைய சாபமிடலே நல்ல சான்றாகும்.

'இடி விழ' என்று திட்டுவதையும் தாண்டி இடியைச் செய்தாவது விழுத்த வேண்டும் என்று கூறுவதில் அர்த்தங்கள் ஆயிரங்கள் பொதிந்து கிடக்கின்றன.

தமிழர்களைப் பொறுத்தவரையில் இந்த 'இடி விழ' என்ற வாசகம் அவர்களின் அரசியலுக்குப் புதியதல்ல.

1977 நாடாளுமன்றத் தேர்தலில் தனிச்சக்தியாக தமிழர் விடுதலைக் கூட்டணி உருவெடுத்திருந்த கட்டத்தில் - இப்போது போல அப்போதும் - எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழர்களுக்குக் கிடைத்த காலம் அது.

இலங்கையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகித்த முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்றுக் கொண்டார் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம். அவர் நாடாளுமன்றத்தில் பயன்படுத்திய சொற்றொடர்தான் இந்தத் 'தலையில் இடி விழ' என்ற வாசகம்.

1977 ஜூலையில் நடைபெற்ற தேர்தலில் வடக்கு, கிழக்கில் 17 தொகுதிகளில் அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிவாகை சூடியது.

அப்போது இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவிலில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் இரண்டாவது உறுப்பினராகத் தெரிவானார் மயில்வாகனம் கனகரத்தினம். எனினும் ஐந்து மாதத்திலேயே அவர் அரசுப் பக்கம் தாவினார். 1977 டிசெம்பரில் ஐக்கிய தேசியக் கட்சி பக்கம் தாவிய அவருக்கு அதற்குப் பரிசாக மட்டக்களப்பு மாவட்ட அமைச்சர் பதவி என்ற எலும்புத் துண்டு போடப்பட்டது.

தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்ட வழிக்குத் திரும்பி, இயக்கச் செயற்பாடுகள் முனைப்புப் பெற ஆரம்பித்த அவ்வேளையில் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் தென்னிலங்கைச் சிங்கள அரசுப் பக்கம் சாய்ந்தமை தமிழர் அரசியலில் பெரும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தின.

அவரது கட்சி மாற்றத்தை நாடாளுமன்றத்தில் கண்டித்து, ஆவேசமாக உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம், கனகரத்தினத்தைப் பார்த்து 'உம் தலையில் இடி விழ....!' என்று சாபமிட்டார்.

அவர் அவ்வாறு குறிப்பிட்டு சில வாரங்களிலேயே - 1978 ஜனவரி 24ஆம் திகதி - கொழும்பு கொள்ளுப்பிட்டியில் வைத்துச் சுடப்பட்டார் கனகரத்தினம். அந்தச் சூட்டுக் காயங்களினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கனகரத்தினம் மூன்று மாதங்கள் கழித்து காலமானார்.

அமிர்தலிங்கத்தின் 'உம் தலையில் இடி விழ!' என்ற சாபம், அப்போதைய தமிழ் இளைஞர்களைத் தூண்டி, அந்தச் சாபத்தைச் செயற்படுத்த வைத்ததாகக் குற்றம் சுமத்தினர்.

இப்போது பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மீது அதே போன்ற சாபம் இன்னொரு தரப்பால் போடப்பட்டிருக்கின்றது.

விமோசனம் இல்லாத இத்தகைய சாபங்கள் மோசமானவை தான்!

# கிளிநொச்சி மாவட்டத்தின் வைத்தியத்துறையில் வைத்திய நிபுணர்கள் உட்பட 113 வெற்றிடங்கள்!

கிளிநொச்சி, செப். 12

கிளிநொச்சி மாவட்டத்தின் வைத்தியத்துறையில் வைத்திய நிபுணர்கள் உட்பட 113 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

யுத்தப் பாதிப்புக்களில் இருந்து மீண்டுவரும் கிளிநொச்சி மாவட்டத்தில் மக்கள் தமக்கான மருத்துவத் தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர்.

மாவட்டத்திலுள்ள பல வைத்தியசாலைகளில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது.

இதனைவிட ஏனைய ஆளணி மற்றும் பௌதிக தேவைகளும் அதிகளவில் காணப்படுகின்றன.

தற்போதைய ஆளணி விவரங்கள் தொடர்பில் மாவட்ட பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் வெளியிடப்பட்ட தகவல்களின் அடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தின் வைத்தியத் துறைக்கு தற்போதுள்ள தேவைகளின்படி 113 இற்கும் மேற்பட்ட ஆளணி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

அதாவது 19 வைத்திய நிபுணர்கள் தேவையான நிலையில் 17 வைத்திய நிபுணர்களும், 108 வைத்தியர்கள் தேவையான நிலையில் 85 வைத்தியர்களும், 13 பல் வைத்தியர்கள் தேவையான நிலையில் 10 வைத்தியர்களும் மாத்திரமே கடமையாற்றி வருகின்றனர்.

இதேவேளை, 122 தாதிய உத்தியோகத்தர்கள் தேவையான நிலையில் 91 தாதிய உத்தியோகத்தர்களும், 99 குடும்பநல உத்தியோகத்தர்கள் தேவையான நிலையில் 61 குடும்ப நல உத்தியோகத்தர்களும் கடமையாற்றுகின்றனர்.

இதனைவிட பொதுச் சுகாதார பரிசோதகர்கள், மருந்துக் கலவையாளர், தடுப்பூசி வழங்குநர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் உள்ளிட்ட 23 பதவி நிலைகளில் கடமையாற்ற வேண்டிய ஆயிரத்து 58 ஆளணி வளத்தேவைகள் காணப்படுகின்ற நிலையில், 945 பேர் மாத்திரமே கடமையாற்றி வருவதுடன் 113 பேருக்கான பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

# கெஹலியவுக்கு நீதிமன்றம் பிணை!



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் ஊடகத்துறை அமைச்சராகச் செயற்பட்ட கெஹலிய ரம்புக்வெலவுக்கு கொழும்பு நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரச அச்சிடல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் ஜயம்பதி பண்டார ஹென்கெந்தவிற்கும் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல ஊடக அமைச்சராகப் பதவி வகித்த காலப்பகுதியில் அரச அச்சிடல் கூட்டுத்தாபனத்திற்கு நிதி வழங்கியமை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது கெஹலிய ரம்புக்வெலவை ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான பிரத்தியேக பிணையில் விடுவிப்பதற்கு கொழும்பு பிரதம நீதிவான் லால் ரணசிங்க பண்டார அனுமதி வழங்கியுள்ளார்.

ஊழல் மற்றும் மோசடிக்கு எதிரான ஆணைக்குழுவினால் அரச அச்சிடல் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கு எதிராக 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அரச நிதி ஒழுங்குகளை மீறி 80 லட்சம் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினார் என அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கு எதிரான வழக்கு நேற்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அவரையும் 5 லட்சம் ரூபா பெறுமதியான பிரத்தியேக பிணையில் விடுவிப்பதற்கு நீதிவான் லால் ரணசிங்க பண்டார அனுமதி வழங்கியுள்ளார்.

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று கிருஷ்ண ஜெயந்தி சிறப்பு நிகழ்வுகள்

## நாளை அதிகாலை சக்கரத்தாழ்வார் வீதியுலா

வடமராட்சி, செப்.12

துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை இரவு சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

மாலைப் பூசையைத் தொடர்ந்து விசேட சொற்பொழிவு, கலை நிகழ்ச்சி, நாட்டியாஞ்சலி, இசை நாடகம் என்பன இடம்பெறும்.

இன்று இரவு 7 மணி முதல் 8 மணி வரை விசேட சொற்பொழிவு இடம் பெறும். பண்டிதர் பொன். சுகந்தன் 'விசுவரூபம்' எனும் பொருள் பற்றி சொற்பொழி வாற்றுவார். இரவு 8 மணி முதல் 10 மணி வரை பொலி கண்டி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் 10 மணி



முதல் 11.30 மணி வரை ஞானசம் பந்தர் கலை மன்ற மாணவர்களின் நாட்டிய அஞ்சலியும் இடம்பெறும்.

நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பு நிகழ்வுகளும் சங்காபிஷேகமும் (1008) இடம்பெறும். நாளை அதிகாலை 2 மணி முதல் 4 மணி வரை கற்கோவளம் வேணுகான சபா மன்றத்தின் 'மயானத்தின் மன்னன்' என்ற இசை நாடகமும் தொடர்ந்து அதிகாலை 4 மணிக்கு வசந்த மண்டபத்தில் விசேட பூசை நடைபெற்று சக்கரத்தாழ்வார் உள்வீதியும் பூந்தண்டிகையில் வெளி வீதியும் உலா வருவார். வீதி உலாவின் போது வடக்கு வீதியில் உறியடி உற்சவம் இடம்பெறும். (இ)

### நாளை

13.09.2017
புதன்கிழமை
நட்சத்திரம் : ரோகிணி மு.ப.8.18 வரை
திதி : அட்டமி மு.இ. 11.48 வரை
சுபநேரம் : 04.33 – 06.03
இராகுகாலம் : 12.03 – 01.33

# வியட்னாம் தீவு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்ட இலங்கையின் ஜெனரல்களும் மனைவிமாரும்!

## இலங்கைத் தூதரகம் தலையிட்டு விடுவிப்பு



இலங்கையின் ஓய்வுபெற்ற மூத்த படைத் தளபதிகளும் அவர்களின் மனைவிமாரும், வியட்னாமில் உள்ள தீவு ஒன்றில் கடந்த வாரம் தடுத்து வைக்கப்பட்டனர்எனகொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிநிலையில் இருந்து ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த, நான்கு நட்சத்திர ஜெனரல்கள் இருவர் உள்ளிட்ட மூத்த படை அதிகாரிகள்மற்றும்அவர்களின்மனைவிமார் என 65 பேர், வியட்னாமுக்கு சுற்றுலா சென்றிருந்தனர்.

சைகூனில் உள்ள மூன்று நட்சத்திர விடுதி ஒன்றில் தங்குமிட வசதிகளுடன், இந்தப் பயணத்துக்கு, 120,000 ரூபாவை பயண முகவர் அறவிட்டிருந்தார்.

இதையடுத்து, முன்னாள் படை அதிகாரிகள் மற்றும் அவர்களின் மனைவிமார் என 65 பேர் ஹனோய் சென்று மூன்று நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கியிருந்தனர். அங்கிருந்து சாய்கூனில் உள்ள தீவு ஒன்றிலுள்ள சிறிய தீவில் உள்ள விடுதிக்கு கடந்தவாரம் சென்றனர்.

எனினும், அவர்களுக்கு அங்கு தங்குவதற்கு விடுதி நிர்வாகம் அனுமதி மறுத்து விட்டது. ஆளுக்குத் தலா 100 டொலரை செலுத்தாவிடின், தீவை விட்டு வெளியேறுவதற்கு படகு தர முடியாது என்றும் விடுதி நிர்வாகம் கூறியுள்ளது.

பயண முகவர் பின்னர், கட்டணத்தைச் செலுத்துவார் என்று முன்னாள் படை அதிகாரிகள் கூறிய போதும், விடுதி நிர்வாகம் அதனை நிராகரித்து விட்டது.

தீவை விட்டு வெளியேறுவதானால், 100 டொலர்களை செலுத்த வேண்டும் என்று அவர்களின் கடவுச் சீட்டை வைத்துக்கொண்டு விடுதி நிர்வாகம் மிரட்டியுள்ளது.

இந்த நிலையில், அவர்கள் வியட்னாமில் உள்ள இலங்கைத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு முறையிட்டனர்.

இதையடுத்து, இலங்கை தூதரகம் தலையிட்டு, கட்டணம் செலுத்துவதற்கு தாம் பொறுப்பேற்பதாகக்கூறியதையடுத்து, அனைவரும்விடுவிக்கப்பட்டு, கடந்தவார இறுதியில் கொழும்பு திரும்பினர்.

இந்தக் குழுவில் இருந்த இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிறிலால்வீரசூரிய இதுகுறித்து இராணுவத் தலைமையகத்திடமும் வெளிவிவகார அமைச்சிடமும் முறையிட்டதை அடுத்து, உடனடியாகவே, சம்பந்தப்பட்ட பயண முகவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை இந்தப் பயணத்தின் போது, சுற்றுலா சென்றவர்களில் ஒருவரின் தங்கச் சங்கலி, ஹனோயில் திருடப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, விடுதி பணியாளர்களால் தாம் மனிதாபிமானமற்ற முறையில் அவமானப்படுத்தப்பட்டோம் என முன்னாள் படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(க)

# திருத்தத்துடன் 20 மீண்டும் நாடாளுமன்றுக்கு வரும்!

## கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் திட்டவட்டம்



கொழும்பு, செப். 12

மாகாண சபைத் தேர்தல் குறித்தான 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் செய்த பின்னர் மீண்டும் அதனை நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி விரைவில் இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் தொடர்பில் ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அனைத்து மாகாண சபை தேர்தல்களையும் ஒரேதினத்தில் நடத்தும் நோக்கில் கடந்த மாத இறுதியில் அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த சட்டமூலத்தில் மாகாண சபைகளுக்கான புதிய தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்படவுள்ளது. அத்துடன், இந்தச் சட்டமூலத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதியை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டமூலம் நாடா ளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமையை அடுத்து பல தரப்புகளில் இருந்து எதிர்ப்புகள் வெளிவந்த வண்ணமாக உள்ளன.

மாகாண சபைகளின் தேர்தலுக்கான திகதியை நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்ற ஷரத்திற்கு அரசியல் கட்சிகளிடம் இருந்தும் மாகாண சபைகளிடம் இருந்தும் பல கோணங்களில் இருந்தும் எதிர்ப்புகள் வெளிவந்துள்ளன.

இதன்படி வடக்கு, ஊவா, தென் உள்ளிட்ட மாகாண சபைகளில் குறித்த சட்டமூலம் நிராகரிக்கப்பட்டது. அதேபோன்று மேல் மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் குறித்த சட்ட மூலத்தின் மீதான விவாதம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் திகதியை நாடாளுமன்றம் தீர்மானிப்பதானது மாகாண சபையின் அதிகாரங்களை பறித்தெடுக்கும் உத்தி என்று மாகாண முதலமைச்சர்கள் கடுமையான எதிர்ப்பை வெளியிட்டனர்.

இந்த நிலையில், மாகாண சபைகளுக்கான தேர்தல் திகதி தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கும் வகையில் திருத்தங் கள் செய்யப்பட்டு அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அரசு உத்தேசித்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரி விக்கையில்-

மாகாண சபை தேர்தல் முறைமை குறித்தான 20 ஆவது திருத்தச்சட்டமூலம் திருத்தங்களுடன் விரைவில் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக் கப்படும். எனினும் எப்போது சமர்ப்பிக்கப்படும் என்ற திகதி தெரியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



# யாழில் பாரதி நினைவு கூரல்!

யாழ்ப்பாணம், செப். 12

பாரதியாரின் 95 ஆம் ஆண்டு நினைவுநாள் நேற்றுக் காலை யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள பாரதியார் நினைவும் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது

இதன் போது இந்தியத் துணைத் தூதுவர் என்.நடராஜன் உட்படப் பலரும் பாரதியார் சிலைக்கு மலர் மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் மதகுரு மார்கள், கல்வியியலாளர்கள், மாணவர்கள், தூதரக அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# வீசப்பட்ட நிலையில் இராணுவச் சீருடை மீட்பு!



வவுனியா தேக்கவத் தைப்பகுதியில் வீசப்பட்ட நிலையில் இராணுவச்சீருடை மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை வவுனியாதேக்கவத்தைப்பகுதியில் 9 ஆம் ஒழுங்கையில் விசேட அதிரடிப்படையினரின் இலச்சினையுடன் இராணுவச்சீருடை காணப்படுகிறது எனப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் இராணுவ சீருடையை மீட்டுள்ளனர்.

இந்த இராணுவ சீருடை சட்டவிரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட் டிருக்கலாம் என்றும் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir



# மீண்டும் ஓர் அழிவுக்கு தமிழர்கள் தயாரில்லை!

## வலியுறுத்துகிறார் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கருணாகரம்



20 ஆவது திருத்தச் சட்டம் தோற்கடிக்கப்பட்டால், தமிழர்களுக்கான தீர்வு பெறும் சந்தர்ப்பம் இல்லாமல் போகும். இதனால், எமது சந்ததி மீண்டும் இன்னல்களைச் சந்திக்க வேண்டியேற்படும். தமிழர்கள் மீண்டும் ஓர் அழிவுக்குத் தயாராக இல்லை.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை பொதுநூலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

20 ஆவது திருத்தச் சட்டத்தைச் சிலர் பூதமாக பார்க்கின்றனர். சிலர் கடவுளாகப் பார்க்கின்றனர்.

நாங்கள் அதனை எப்படிப் பார்க்கப் போகின்றோம் என்பதே எங்களுக்கு முன்பாக இருக்கும் கேள்வி. இந்தச் சட்டமூலம் தோற்கடிக்கப்பட்டு தெற்கில் மாகாண சபை ஒன்றைக் கூட்டு எதிரணி கைப்பற்றுமானால், தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இல்லாமலேயே போய்விடும்.

இந்தத் திருத்தச் சட்டத்தில் என்ன இருக்கின்றது என்பது தெரியாத நிலையிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில மக்கள் பிரதிநிதிகள் அதற்கு எதிரான கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையும், இலங்கை முஸ்லிம் காங்கி ரஸின் தலைமையும் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி அதில் ஒரு திருத்தத்தைச் செய்துள்ளனர்.

20 ஆவது திருத்தச் சட்டம் மாகாணசபைத் தேர்தல்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவுள்ளது.

அனைத்து மாகாண சபைக்கும் ஒரே தடவையில் தேர்தலை நடத்துவதும், ஒரு மாகாணசபை கலைக்கப்படுமானால் என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதே அந்த சட்டமூலத்தில் திருத்தமாக கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை நாங்கள் சற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இந்தத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படாமல் இருந்தால் இந்த மாதத்துடன் கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வரும். கிழக்கு மாகாணத்தின் தேர்தல் தொடர்பில் அரசு எந்தக் கவலையும் கொள்ளாது.

தற்போது நாடாளுமன்றம் அரசியல் சாசன சபையாக மாறி இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வைக் காண்பதற்கான நகர்வுகளைச் செய்து கொண்டிருக்கிறது. இந்த வேளையில் தெற்கில் அதனை குழப்புவதற்கு சில சக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளன.

பண்டா - செல்வா ஒப்பந்தம் உட்பட இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குத் தீர்வை வழங்குவதற்கு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் அன்றைய தேசிய கட்சிகள் அவற்றை எதிர்த்தன. இதன் காரணத்தால் 60 வருட காலமாக இந்த நாட்டில் தமிழ் மக்கள் பட்ட துன்பங்களையும் அழிவுகளையும் கணக்கிட முடியாது. -என்றார். (ச)





கிழக்கில் 'தேரோடும் கோயில்' எனப் பெயர் பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய தேரோட்டப் பெருவிழா நேற்று இடம் பெற்றது.

இதன்போது அலங்கரிக்கப்பட்ட தேரில் பிள்ளையாரும், பார்வதி சிவன் சமேதராய் சித்திரத் தேரிலும் வலம் வந்தனர். இந்தத் திருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து தேர் இழுத்தனர். (ச)

# நிரந்தர நியமனங்களை வழங்கக் கோரி மட்டு. சுகாதாரத் தொண்டர்கள் பேரணி!



மட்டக்களப்பு மாவட்ட சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனங்களை வழங்கக்கோரி நேற்று திங்கட்கிழமை காலை கண்டனப் பேரணி ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு புதிய பாலம் அருகில் இருந்து பேரணியாகச் சென்ற சுகாதாரத் தொண்டர்கள்

காந்திபூங்கா முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தவை வருமாறு:-

1998 ஆம் ஆண்டு முதல் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சுமார் 65 சுகாதார தொண்டர்களுக்கு இதுவரையில் நியமனங்களும் வழங்கப்படவில்லை. எமக்கு நியமனங்கள் வழங்கப்படும் எனக் கூறி 2004 ஆம் ஆண்டு மற்றும் 2005 ஆம் ஆண்டுகளில் நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டன. எனினும் இதுவரையில் நியமனங்கள் வழங்கப்படவில்லை.

2016 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையால் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு இருநூறுக்கும் மேற்பட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதிலும் நாங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளோம்.

அனைத்து தகுதிகளையும், கல்வித்தகைமைகளையும் கொண்டுள்ள போதிலும் ஏன் இதுவரையில் எங்களுக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை.

பல ஆண்டுகளாக யுத்தம் மற்றும் சுனாமி அனர்த்த காலங்களில் எந்தவித கொடுப்பனவுகளும் இன்றி சேவை மனப்பான்மையுடன் கடமையாற்றிய எங்களை கிழக்கு மாகாணசபை புறக்கணிக்கின்றமை கவலைக்குரிய விடயம் ஆகும். -என்றனர். (ச)

# நாட்டில் இனவாதத்தைத் தூண்டி அரசியல் பிழைப்பு நடத்தக் கூடாது

## அமைச்சர் மனோ மீது கிழக்கு முதல்வர் பாய்ச்சல்

கிழக்கு மாகாணத்தில் இன உறவு சீராக இல்லை என்று அமைச்சர் மனோகணேசன் சமீபத்தில் தெரிவித்துள்ளார். இவ்வாறு இனவாதத்தைத் தூண்டி அரசியல் பிழைப்பு நடத்தும் அருவருக்கத்தக்க கலாசாரத்திலிருந்து விடுபட வேண்டும்.

-இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மனோகணேசன் பேசியவை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாண இன உறவு தொடர்பில் அவர் வெளியிட்



டுள்ள தவறான கருத்து மூலம், அவரது அறிவு சுத்த சூனியமாக இருக்கின்றமையை வெளிப்படுகிறது. கிழக்கு மாகாண சபை நிதி ஒதுக்கீடுகளில் பாரபட்சம் இருக்கிறது என அவர் ஆதாரத்துடன் கூறினால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

இன ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறோம் எனக் கூறிக் கொள்கின்றவர்கள் அவர்கள் கூறும் சீர்குலைந்துள்ள இன உறவைச் சீர்படுத்துவதற்காக என்ன செய்தார்கள்? என்னென்ன யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளார்கள்?- என்றார். (ச)

# ஐ.நா. தடைகளை மீறியது இலங்கை

## கண்காணிப்புக் குழு அறிக்கையில் குற்றச்சாட்டு!

கொழும்பு, செப். 12

வடகொரியாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள ஐ.நாவின் பொருளாதாரத் தடையை, இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் மீறியிருக்கின்றன என ஐ.நா. குற்றம்சாட்டியுள்ளது.

வடகொரியா மீது கடந்த ஆண்டு செப்ரெம்பர் 05 ஆம் திகதி விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளைக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட ஐ.நாவின் ஏற்றுமதி கண்காணிப்பு நிபுணர்கள் ஐ.நாவுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாத முற்பகுதியுடன் முடிந்த கடந்த ஆறு மாதகாலத்தில், சிறிலங்கா, சீனா, இந்தியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு, ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியா, 27 கோடி டொலர்பெறுமதியான, நிலக்கரி, இரும்பு மற்றும் பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது.

ஐ.நாவின் தகவல்களின் படி, வடகொரியாவுக்கு எதிரான, தடைகளை மீறி, 11 நாடுகள், கடந்த ஆண்டு ஒக்ரோபர் தொடக்கம், இந்த ஆண்டு ஏப்ரல் வரையான காலத்தில், 44,344,912 டொலர் பெறுமதியான உருக்கு மற்றும் இரும்பை இறக்குமதி செய்துள்ளன.

இலங்கை மாத்திரம், 1,860,516 டொலர் பெறுமதியான உருக்கு மற்றும் இரும்பு என்பனவற்றை வடகொரியாவில் இருந்து இந்தக் காலப்பகுதியில இறக்குமதி செய்துள்ளது.

வடகொரியாவின் கிம் ஜொங் உன் அரசாங்கம் ஐ.நாவின் ஆயுத தடை மற்றும் கப்பல் போக்குவரத்து, நிதி கட்டுப்பாடுகளை தொடர்ந்து மீறி வருவதாகவும், ஐ.நா நிபுணர்களின் 111 பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

வடகொரியாவில் இருந்து உருக்கு, இரும்பு போன்ற பொருள்களை இறக்குமதி செய்து, இலங்கை, பார்படோஸ், சீனா, கோஸ்டாரிக்கா, பிரான்ஸ், எல்சால்வடோர், இந்தியா, இந்தோனேசியா, அயர்லாந்து, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மீறியிருக்கின்றன என்றும் ஐ.நா. அறிக்கை கூறியுள்ளது.

வடகொரியாவிடம் இருந்து இலங்கை கடந்த ஆண்டு ஒக்ரோபர், நவம்பர், டிசெம்பர் மாதங்களிலும், இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களிலும், உருக்கை இறக்குமதி செய்துள்ளது.

இதைவிட, இந்த ஆண்டு ஜனவரி, பெப்ரவரி மாதங்களில், சட்டவிரோதமாக வடகொரியாவிடம் இருந்து, சிறிலங்கா 32,184 டொலர் பெறுமதியான, செம்பையும் இறக்குமதி செய்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இதைவிட, வடகொரியாவுக்காக கடற்படைக் கப்பல்களை நவீனப்படுத்தும், கிறீன் பைன் என்ற நிறுவனத்தின் இரண்டு பிரதிநிதிகள், சிறிலங்கா வந்த கப்பல்களை விற்க முயற்சித்ததாகவும், இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அங்கோலாவில் கடற்படைக் கப்பல்களை நவீனமயப்படுத்துவதும் ஐ.நாவின் தடைகளை மீறும் செயல் என்று ஐ.நா அறிக்கை கூறியுள்ளது.

## சிறுவர் துஷ்பிரயோகம்; இதுவரை 6,165 முறைப்பாடு!

கொழும்பு, செப். 12

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் இந்த வருடம் இதுவரையிலும் 6 ஆயிரத்து 165 முறைப்பாடுகள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1929 என்ற அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக 90 சதவீதமான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், இந்த முறைப்பாடுகளுள் சிறுவர்களைப் வேலைக்கு அமர்த்துவது தொடர்பிலே அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைத்துள் என என்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சிறுவர்களை வேலைக்கமர்த்துவது தொடர்பில் ஆயிரத்து 518 முறைப்பாடுகளும், சிறுவர்களுக்கான கல்வி மறுப்பு தொடர்பில் 975 முறைப்பாடுகளும், சிறுவர் துர்நடத்தை தொடர்பில் 365 முறைப்பாடுகளும், சிறுவர்களை புறக்கணிப்புச் செய்தல் தொடர்பில் 222 முறைப் பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

மேலும், சிறுவர்களை யாசகம் எடுப்பதற்கு ஈடுபடுத்துவது தொடர்பில் 222 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன எனவும் சிறுவர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

## நல்லாட்சி அரசில் குழப்பம் ஏற்படாது!

### அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவிப்பு

கொழும்பு, செப். 12

தேசிய அரசில் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியும் புரிந்துணரவுடன்செயற்பட்டு வருகின்றன. இதனால், தேசிய அரசாங்கத்தில் குழப்பங்கள் ஏற்படப்போதில்லை என அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.



கட்சிகளிடையே சிறிய முரண்பாடுகள் இருந்த போதிலும், ஒரே நோக்கத்தில் இருசாராரும் பயணிக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சில குழப்பகரமான செயற்பாடுகள் காரணமாக தேசிய அரசு சிக்கலிலுள்ளது என விமர்சிக்கப்பட்டு வரும் நிலையில் இந்த விடயம் தொடர்பில் ஊடகம் ஒன்றிற்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்குள் குழப்பங்கள் இருக்கலாம். ஆனால், தேசிய அரசில் எந்தவித குழப்பங்களும் இல்லை.

கட்சிகளுக்கிடையில் கொள்கை ரீதியில் சில மாற்றுக் கருத்துக்கள் இருந்த போதிலும் தேசிய அரசை குழப்ப ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சிக்கவில்லை. குறிப்பாக 2020 வரையில் தேசிய அரசு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

## படையினர் எவரும் குற்றம் புரியவில்லை என்கிறார் அமைச்சர் சஜித் பிரேமதாஸ!

கொழும்பு, செப். 12

முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த எவருமே, எந்தவொரு போர்க் குற்றங்களையும் இழைக்கவில்லை என்று இலங்கையின் வீடமைப்பு மற்றும் கட்டுமானத் துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.



திம்புலாகலவில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது போர் வீரர்கள் போர்க் குற்றங்களை இழைத்தார்கள் என்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் எவருமே அப்படியான குற்றங்களை புரியவில்லை.

விடுதலைப் புலிகள் மட்டும் தான் போர்க்குற்றங்களை இழைத்தார்கள். பாதுகாப்புப் படையினர், மூன்று பத்தாண்டுகால போரை முடித்து வைத்து, அமைதியை உருவாக்கினார்கள்.

போர்க்குற்றங்களுக்காக சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத் தப்பட வேண்டியவர்கள் விடு தலைப் புலிகளின் உறுப்பினர்களே தவிர, தாய் நாட்டை விடுவிப்பதற்காகச் சண்டையிட்ட போர் வீரர்களையல்ல.

எமது போர் வீரர்கள் எவரையும் கைது செய்வதற்கு நல்லாட்சி அரசு அனுமதிக் காது.

போர் வீரர்களை போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தி மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்லப் போகிறோம் என எதிர்க்கட்சியைச்சேர்ந்த சிலர் கூச்சலிடுகின்றனர். அவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

அவர்களின் நோக்கம் போர் வீரர்களைப் பாதுகாப்பது அல்ல. மீண்டும் அதிகாரத் துக்கு வருவதற்கான வாக்குகளைப் பெறுவதே அவர்களின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அரச வர்த்தமானி அறிவித்தல்களுக்கு சில முச்சக்கர வண்டி சங்கங்கள் ஆதரவு!

கொழும்பு, செப். 12

முச்சக்கர வண்டிக்கான மீட்டர் பொருத்தி, பற்றுச் சீட்டு வழங்கும் படி அரசு வர்த்தமானி மூலம் வெளியிட்டுள்ள சட்டத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்கவுள்ளோம் என அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.

அந்தச் சங்கத்தின் தலைவர் லலித் தர்மசேகர இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இருப்பினும், அரசு வெளி யிட்டுள்ள சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவிப்புக்கு பல முச்சக்கர வண்டி சங்கங்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன் காலை 8 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்-**

மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக்கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்-**

சோலை, ஜெயபுரம், நாகப்படுவான், பல்லவராயன்கட்டு ஒருபகுதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அட்டம்பஸ்கட கிராமம், தவசிக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## தினசரி ராசி பலன் 12.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 27 ஆம் நாள் ஸப்தமிதிதி பி.இ. 01.02 மணி வரை. பின்னர் அஷ்டமி. நட்சத்திரம் கார்த்திகை காலை 7.55 மணி வரை. பின்னர் ரோகிணி. சித்தாமிர்தயோகம் முழுவதும். ராகுகாலம் மாலை 03.09 மணி முதல் 4.40 மணி வரை. சுபநேரம் பகல் 10.33 மணி முதல் 12.04 மணி வரை. இன்று கார்த்திகை விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத தேய்பிறை ஸப்தமி. பிறந்த நட்சத்திர வழிபாடு: ரோகிணி. இன்று ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** நன்மையான நாள். சற்றுக் கூடுதலான உற்சாகம், சீரீப் பொலிவுடன் திகழ்வார்கள். காரிய சாதனையில் பாராட்டுகளும் வெற்றிகளும் குவியும். குடும்ப முன்னேற்றம் மேம்படும்.

**ரிஷபம் :** இன்பமான நாள். குடும்பத்தில் சுப காரிய நிகழ்வுகள் கூடி வரும். கௌரவ நிலை உயரும். புகழ் ஏற்படும். சமூக சேவையில் ஈடுபாடு கூடும். தெய்வப் பிரார்த்தனை நிறைவேறி மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்:** குழப்பமான நாள். மனம் சஞ்சலமடையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். தொழிலில் நேரடியாக கவனம் செலுத்த வேண்டும். பிறரை நம்பி தொழிலை ஒப்படைக்கக் கூடாது.

**கடகம் :** யோகமான நாள். தனலாபம் பெருகும். சிலர் வாடகை வீடுகளில் இருந்து சொந்த வீட்டுக்கு குடி புகுவார்கள். வாகன யோகமும் உண்டு. குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும்.

**சிம்மம் :** சம பலன்கள் காணப்படுகின்றன. வரவு சுமாராக இருக்கும். எடுக்கும் முயற்சிகள் தடை தாமதமாகும். தேக சுகம் சுமாராக இருக்கும். தொழிலில் கடும் உழைப்பும் அலைச்சலும் அதிகமாகும்.

**கன்னி:** மேன்மையான நாள். ஆன்மீக செயற்பாடும் சமூக சேவையும் அதிகரிக்கும். வேலை கிடைத்தல், வேலையில் பதவி உயர்வு, விருப்ப இடமாற்றம் போன்ற பலன்கள் உண்டாகும்.

**துலாம்:** யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். செல்வாக்கில் சற்றுப் பின்னடைவு ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் பாராமுகமாகச் செயற்படுவார்கள்.

**விருச்சிகம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். தேகசுகம், குடும்ப சுகம் ஓரளவு சுமாரக இருக்கும். புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது.

**தனுசு :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. பண வரவு திருப்தியைத் தரும். உத்தியோக நிலை மேம்படும். வேலை எதிர்பார்த்து இருப்போருக்கு நல்ல வேலை கிடைக்கும்.

**மகரம்:** சந்தோஷமான நாள். எடுக்கும் காரியங்களில் வெற்றி உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும்.

**கும்பம் :** துயரமான நாள். உத்தியோகத்தில் தடை தாமத பலன்களுக்கு இடமுண்டு. தேவையில்லாத இடமாற்றம் ஏற்படும். அதிகாரி மற்றும் பணியாளர்களுடன் விரோதம் ஏற்படும்

**மீனம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் சகல முன்னேற்றமும் படிப்படியாக ஏற்படும்.

**சந்திராட்டமநாள்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று நற்கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

உள்ளூராட்சித் தேர்தலில்

# வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகளை எண்ண முடிவு!

கொழும்பு, செப். 12

அடுத்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கையின் தேர்தல்கள் ஆணைக் குழு முடிவு செய்துள்ளது.

வாக்குகளை எண்ணும் பணியை திறமையாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாக்குகளை எண்ணும் பணிக்குத் தேவையான வசதிகளைக் கொண்டதாக வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அனுமதியளிக்கும் வகையில் புதிய தேர்தல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.




கடினமான பகுதிகளில் மாத்திரம், பல வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைக்கவும், ஓர் இடத்தில் வாக்குகளை எண்ணவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, முடிவு மீள் ஆய்வு செய்யப்படும்.

அதன் பின்னரே, தேர்தல் முடிவுகள், தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்படும். அதனையடுத்து, தேர்தல் ஆணையம், முடிவுகளை சம்பந்தப்பட்ட பிரிவு வாரியாக அறிவிக்கும்.

இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

# அடிப்படைப் பயிற்சியை நிறைவுசெய்து 390 கடற்படை வீரர்கள் வெளியேற்றம்!

கொழும்பு, செப். 12

இலங்கை கடற்படையின் 229ஆம் நிரந்தர ஆட்சேர்ப்பு பிரிவின் 390 வீரர்கள் அடிப்படை பயிற்சியை நிறைவு செய்து வெளியேறினர்.

பூனாவை கடற்படை கப்பல் சிக்ஷாவில் கடந்த சனிக்கிழமை நடந்த அணிவகுப்பு வைபவத்தின் போது பொருட்கள் மற்றும் சேவைகள் பணிப்பாளர் நாயகம் ரியர் அட்மிரல் நிஹால் பர்னாந்து பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்தப் பயிற்சியின் போது சிறந்து விளங்கிய வீரர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன.

229ஆவது ஆட்சேர்ப்பில் ஆர்.ஆர்.யூ.சி ராஜபக்ஷ சிறந்த பயிட்சியாளருக்கான விருதைப் பெற்றதுடன், பீ.எம் டில்ஷான் சகல பாடங்களிலும் அதிக புள்ளிகளைப் பெற்றதற்கான விருதைப் பெற்றார்.



ஜீ.ஆர்.பி.எம் பண்டார சிறந்த துப்பக்கியாளருக்கான விருதை பெற்றதுடன் எச்.பி.டி.எல் பிரியதர்ஷன மற்றும் டி.ஜி. எஸ்.எம்.ரத்னாயக்கா சிறந்த விளையாட்டுப் போட்டியாளர்களுக்கான விருதை வென்றனர்.

இந்த நிகழ்வில் மகா மகாசங்கத்தினர் உள்ளிட்ட மத குருமார்கள், கடற்படைத்தலைமையகத்தின் மற்றும் வடமத்திய கடற்படை கட்டளையின் மூத்த மற்றும் இளநிலை உத்தியோகத்தர்கள், முப்படை மற்றும் காவல்துறை அதிகாரிகள், பயிற்சி முடித்து வெளியேறும் வீரர்களின் குடும்பத்தினரும் கலந்துகொண்டனர்.

# பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை பாடசாலையில் இணைக்க விசேட குழு!

கொழும்பு, செப். 12

பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துக் கொள்ளும் வகையில் விசேட குழு ஒன்று நாடளாவிய ரீதியில் உருவாக்கப்படவுள்ளது.

இந்தக் குழுவினர் ஊர் ஊராக சென்று பாடசாலைக்கு செல்லாத சிறுவர்களை மீண்டும் பாடசாலைக்கு சேர்க்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

அம்பகமுவ பிரதேசம் வெலிஓயா தோட்டம் கீழ் பிரிவிற்கான கொன்கிரீட் வீதி மலைநாட்டு புதிய கிராமங்கள் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு



பாவனைக்காக மக்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித்தலைவரும் கல்வி இராஜாங்க அமைச்சருமான வே. இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த செயற்றிட்டத்தின் ஊடாக பாடசாலைக்கு மாணவர்கள் செல்லாத காரணங்கள் இனங்காணப்பட்டு அதற்கான உதவிகளும் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் படிக்காதவர்கள் இருக்கக்கூடாது என்பதற்காகவும் படித்தவர்களின் கல்வி விகிதத்தை அதிகரிப்பதற்காகவும் வறுமை மற்றும் வேறு காரணங்களால் பாடசாலை கல்வியை இடைநிறுத்திய மாணவர்களை கல்வி கற்க வைப்பதற்காகவும் இந்த வேலைதிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# சரத்பொன்சேகாவும் போர்க் குற்றச்சாட்டுகளும்

## அனைத்துலக வல்லுநரின் பார்வை

வழிமூலம் - Ceylon Today
ஆங்கிலத்தில் - FAIZER SHAHEID
மொழியாக்கம் - நித்தியபாரதி

சிறிலங்காவில் இடம்பெற்ற பல்வேறு யுத்த மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சிறிலங்கா இராணுவத்திற்கு எதிராகத் தற்போது மீண்டும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக தென் அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் அனைத்துலக உண்மை மற்றும் நீதி நிகழ்ச்சித் திட்டத்தால் ஜெனரல் ஜெகத் ஜயசூரியவிற்கு எதிராக - இவர் தூதுவராகக் கடமையாற்றிய பிரேசில் மற்றும் கொலம்பியாவிலும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 29 அன்று ஜயசூரியாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இதற்கு மறுநாள் இவர் தனது நாட்டிற்குத் திரும்பினார். எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த சிறிலங்காவின் உள்நாட்டுப் போரில் ஜயசூரிய கட்டளை நிலை இராணுவத் தளபதியாகக் கடமையாற்றியிருந்தார். இவர் யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்த போது இராணுவத் தளபதியாகக் கடமையாற்றிய- தற்போது பிராந்திய அபிவிருத்தி அமைச்சராகப் பணியாற்றும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் நேரடிக் கட்டளையின் கீழ் செயற்பட்டிருந்தார்.



ஆனால், தற்போது சரத் பொன்சேகா, ஜயசூரியவிற்கு எதிராகச் சாட்சியம் வழங்குமளவிற்கு நிலைமை தலைகீழாக மாறி உள்ளது.

**அனைத்துலக சமூகத்தின் தொடர்ச்சியான அழுத்தம்**

சிறிலங்கா இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை செய்யப்பட்டு, தண்டனை வழங்கப்படவேண்டும் என 2009 தொடக்கம் அனைத்துலக சமூகத்தால் அரசியல் ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் அழுத்தங்கள் இடப்படுகின்றன. 1949 ஜெனீவா சாசனம் மற்றும் ஹேக் சாசனங்களை மீறியதாக, சிறிலங்காவிற்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையகத்தால் சிறிலங்கா மீது 11/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகப் பொறுப்புக்கூறுவதற்கான பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சிறிலங்கா மீது விசாரணை செய்வதற்காக 19/2, 22/1, 25/1 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவை மஹிந்த ராஜபக்ஷ அரசால் புறக்கணிக்கப்பட்டன.

சிறிலங்காவில் புதிய ஆட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையகத்தில் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்திற்கு சிறிலங்கா அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்தத் தீர்மானம் போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான நம்பகமான விசாரணையை வலியுறுத்துகிறது. சிறிலங்காவின் ஆட்சியைப் பொறுப்பேற்ற புதிய அரசு ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையகத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக இது தொடர்பில் இராஜதந்திர நகர்வை மேற்கொண்டது. குறிப்பாக கலப்பு நீதிப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதில் சிறிலங்கா அரசு தோல்வியுற்றது.



## வன்னியில் இறுதிச் சமரின் போது

# யுத்த களத்துக்கு அருகிலும் கூட நிற்கவில்லையாம்! 'ஓடிவந்த' ஜயசூரிய கூறுகிறார்

**2 வருட கால அவகாசம்**

எட்டு மாதங்களின் பின்னர் ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையகத்தால் சிறிலங்கா தொடர்பில் 34/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது, சிறிலங்கா நீதி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தாமதத்தைக் கொண்டிருந்தாலும் கூட உறுதியான நகர்வுகளை முன்னெடுப்பதாகச் சுட்டிக்காட்டி 30/1 தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை அமுல்படுத்துவதற்காக சிறிலங்காவிற்கு மேலும் இரண்டு ஆண்டுகால அவகாசத்தை வழங்கியது.

எனினும், 30/1 மற்றும் 34/1 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட காலப்பகுதியில் சிறிலங்கா அரசும் பல்வேறு முரண்பட்ட அறிவித்தல்களை விடுத்தது. கலப்பு நீதிமன்றம் தொடர்பாகவும் போர்க் கதாநாயகர்களை நீதியின் முன் நிறுத்துவது தொடர்பாகவும் பல்வேறு வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் பெரும்பாலான கருத்துக்களை சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே முன்வைத்துள்ளார். குறிப்பாக சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த எந்தவொரு வீரரும் அனைத்துலக சமூகத்தால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் தண்டனைக்கு உட்படுத்தப்படமாட்டார்கள் என ஜனாதிபதி அறிவித்திருந்தார்.

**தற்போதைய அரசின் போலியான அணுகுமுறை**

அனைத்துலக சமூகத்தின் கோரிக்கைகளை சிறிலங்கா தற்போதைய அரசாங்கமும் எதிர்க்கத் தொடங்கியுள்ளது. இதுவே சிறிலங்கா அரசாங்கத்தின் போலியான அணுகுமுறைக்கான சாட்சியமாக உள்ளது.



சிறிலங்கா அரசாங்கம் தனக்கான கால அவகாசத்தை மேலும் மேலும் அதிகமாகப் பெற்றுக்கொண்டாலும் கூட இது ஒருபோதும் ஐ.நா தீர்மானத்தை நிறைவேற்றப் போவதில்லை என்பது தெளிவாகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில், சிறிலங்கா தனது எந்தவொரு போர்க் கதாநாயகர்களையும் தண்டிக்கப்போவதில்லை என்பதை அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான நிகழ்ச்சித் திட்டம் கண்டறிந்ததுடன் அனைத்துலக சமூகத்தின் கோரிக்கைகளை முன்வைப்பதற்கான மாற்றுப் பாதை ஒன்றையும் கண்டறிந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரின் கீழ் பணியாற்றியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, வன்னியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையில் சிறிலங்கா இராணுவத்திற்குக் கட்டளை நிலைத் தளபதியாகச் செயற்பட்ட ஜெனரல் ஜெகத் ஜயசூரியாவிற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதென அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான நிகழ்ச்சித் திட்டம் தீர்மானித்தது.

**அவசரமாக நாடு திரும்பினார் ஜயசூரிய**

சிறிலங்காவின் தூதுவராக ஜயசூரிய கடமையாற்றிய நாடுகளில் அவருக்கு எதிராக அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான நிகழ்ச்சித் திட்டத்தால் திட்டமிட்ட வகையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவசர அவசரமாக ஜயசூரிய நாடு திரும்பினார்.

பிரேசில் மற்றும் கொலம்பியாவில் இவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இவர் தூதுவராகக் கடமையாற்றிய ஆர்ஜென்ரீனா, சிலி மற்றும் பெருவில் இன்னமும் ஜயசூரியவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை. சூரினாம் மட்டுமே ஜயசூரியாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு மறுத்துள்ளது.

தன் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு விடுமோ என்கின்ற அச்சத்தின் காரணமாக உடனடியாக நாடு திரும்பிய ஜயசூரிய, தன் மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் நியாயமற்றவை எனவும் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் சரணடைந்த புலி உறுப்பினர்களுக்கான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டேன் எனவும் தெரிவித்தார்.

**ஜயசூரியாவுக்கு எதிராக சாட்சியங்கள் உள்ளன**

அத்துடன், தான் வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது யுத்தகளத்திற்கு அருகில்கூட நிற்கவில்லை எனவும் தெரிவித்தார். எனினும், ஜயசூரியவிற்கு எதிராகத் தன்னிடம் சில சாட்சியங்கள் உள்ளன எனவும் இதனை ஊடகங்களுக்குத் தெரிவிப்பதில் தான் கவலைப்படவில்லை எனவும் சரத் பொன்சேகா அறிவித்திருந்தார். வன்னியில் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் கூடப் பல்வேறு குற்றங்களில் ஜயசூரிய ஈடுபட்டார் என சரத் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், செப்ரெம்பர் 03 அன்று இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டின் போது, தான் நாட்டின் போர்க் கதாநாயகர்களைப் பாதுகாப்பேன் என அதிபர் சிறிசேன வாக்குறுதி அளித்துள்ளார். ஜெனீவாவில் தனது அரசால் இணை அனுசரணை வழங்கப்பட்ட தீர்மானத்தில் குறிப்பிட்டவாறு போர்க் கதாநாயகர்களுக்கு தண்டனை வழங்கும் விடயத்தை தான் கடைப்பிடிக்கப் போவதில்லை என அதிபர் சிறிசேன மீண்டும் மக்கள் மத்தியில் வலியுறுத்தியிருந்தார்.

ஜெகத்ஜயசூரிய பல்வேறு மீறல்களில் ஈடுபட்டிருந்தார் எனவும் இவருக்கு எதிராக எந்தவொரு நீதிமன்றிலும் சாட்சியமளிப்பதற்குத் தான் தயாராக உள்ளேன் எனவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். ஜயசூரியவிற்கு எதிராக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் தனிப்பட்டவை எனவும் இது முழு இராணுவத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை எனவும் பொன்சேகா தெரிவித்தார்.

**பொன்சேகாவுக்கும் சிக்கல் உண்டு**

ஜயசூரியவிற்கு எதிராக அவர் நேரடியாக மீறல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்படவில்லை என்பதையும் இவர் கட்டளைப் பொறுப்பை மேற்கொண்டமையே இவருக்கு எதிரான குற்றச்சாட்டாக உள்ளதையும் பொன்சேகா மறந்திருக்கலாம்.

போர் இறுதிக்கட்டத்தை அடைந்த போது குறித்த குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றன எனக் கூறப்படும் காலப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தின் முதல் நிலைக் கட்டளைத் தளபதியாக தானே செயற்பட்டிருந்தேன் என்பதை சரத் பொன்சேகா மறந்துவிட்டார்.

(மிகுதி நாளை)

காலைக்கதிர் Kalaikkathir






தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

## டோக்லாம் சர்ச்சையில் இருந்து விடுபடும் உடன்பாடு


இந்தியாவும் சீனாவும் டோக்லாம் அல்லது டோங்லாங் பீடபூமி மீதான கட்டுப்பாடு குறித்து பல வாரங்கள் முன்பு தொடங்கிய அவற்றின் சர்ச்சையை நேற்று தணிப்பதற்கு முனைந்தன - இந்த



சச்சரவு, 1962 இல் நடந்த ஒரு மாத காலம் நீடித்த எல்லைப் போருக்குப் பின்னர் ஒரு போதும் நிகழாததொரு இராணுவ மோதலுக்கு நெருக்கமான வகையில் அணு ஆயுதம் தாங்கிய போட்டியாளர்களையும், உலகின் பெரும் மக்கள் தொகை மிகுந்த இரண்டு நாடுகளையும் இட்டுச்சென்றது.

ஒழுங்கமைக்கப்பட்ட நடவடிக்கைகளாக, டோக்லாமில் எல்லையிலுள்ள இராணுவத்தினர் துரிதமாக அங்கிருந்து விலக்குவதற்கு. ஒப்புக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து அது நடைபெற்று வருகின்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் கடந்தமாதம் 28 ஆம் திகதி ஒரு அறிக்கையை வெளியிட்டது.

சுமார் தொண்ணூறு நிமிடங்களுக்கு பின்னர், அத்துமீறி நுழைந்திருந்த இந்திய இராணுவத்தினர் அனைவரும் இந்திய எல்லைப் பகுதிக்குள் திரும்ப பெறப்பட்டனர் என்பதை பெய்ஜிங் உறுதிப்படுத்தியுள்ளதாக ஒரு சீன



அரசாங்க செய்தியாளர் தெரிவித்தார். களத்தில் நிலவும் சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப, சீனா அதன் படைகளை நிலைநிறுத்துவதில் அவசியமான சீரமைவுகளை ஏற்படுத்தும் என்று வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹூவா சுனிங்கும் சேர்த்துக் கூறினார்.

**ஹிமாலய மலைமுகட்டுப் பகுதியான டோக்லாம் பீடபூமியில், நூற்றுக்கணக்கான இந்திய மற்றும் சீன துருப்புக்கள் நூறு மீற்றருக்கு சற்று அதிக தொலைதூர இடைவெளியில் நேருக்கு நேர் எதிர்கொண்டனர்**

இரண்டரை மாதங்களுக்கு முன்னர், இந்தியா, சீனா மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் எல்லைகளை இணைக்கும் மும்முனை சந்திப்பில் உள்ள ஒரு தொலைதூர ஹிமாலய மலைமுகட்டுப் பகுதியான டோக்லாம் பீடபூமியில், நூற்றுக்கணக்கான இந்திய மற்றும் சீன துருப்புக்கள் நூறு மீற்றருக்கு சற்று அதிக தொலைதூர இடைவெளியில் நேருக்கு நேர் எதிர்கொண்டனர்.

மேலும், அச்சுறுத்தும் வகையில், புதுடில்லியும், பெய்ஜிங்கும் போர்க்குணமிக்க அச்சுறுத்தல்களையும், வசைசொற்களையும் பரிமாறிக் கொண்டதோடு, சர்ச்சைக்குரிய எல்லைப் பகுதியின் கிழக்கு பகுதியில் கிட்டத்தட்ட 3,500 கிலோமீற்றர் தொலைவிற்குள்ளாக தங்களது ஆயிரக்கணக்கான துருப்புக்களை கொண்டு குவித்தனர். மேலும் வேறுவழியில் ஆயுத மோதலுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவர்களது தயார் நிலையையும் எடுத்துக்காட்டினர்.

இந்தியா குறிப்பிடும், டோக்லாம் சர்ச்சையில் இருந்து விடுபடும் உடன்பாடு என்பது, செப்ரெம்பர் 3-5திகதிகளில்ஜியாமனில்நடைபெறவுள்ள BRICS அரசாங்க தலைவர்களுக்கான உச்சிமாநாட்டில் பங்கேற்க இந்திய பிரதம மந்திரி நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளபடி சீனாவுக்கு விஜயம் செய்வதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாகவே ஏற்பட்டது.

இந்த உடன்பாடு பற்றிய செய்தியை எந்த அரசாங்கமும் வெளியிடவில்லை. அப்படி எதுவும் எதிர்பார்க்கப்படவும் இல்லை.

**டோக்லாமில் இருந்து இந்தியாவின் சிக்கிம் மாநிலத்திற்கு அண்மித்த பகுதிகள் வரையிலான இடங்களுக்கு அனைத்து இந்திய துருப்புக்களையும் திரும்பப் பெறுமாறு பெய்ஜிங் வலியுறுத்தி வருகின்றது.**

பதற்றமான இராணுவ நிலைப்பாட்டிற்கு இட்டுச்சென்ற சூழலை சீர் செய்யும் வகையில் எந்தவோர் அடிப்படையான பிரச்சினைகளும் தீர்க்கப்படாத நிலையை அது அடிக்கோடிட்டுக் காட்டும்போது, இந்தியாவும் சீனாவும் ஒருவருக்கொருவர் மற்றவர் தான் இறுதியில் பின்வாங்கியதாகக் கூறிக்கொள்கின்றனர்.

டோக்லாமில் இருந்து இந்தியாவின் சிக்கிம் மாநிலத்திற்கு அண்மித்த



பகுதிகள் வரையிலான இடங்களுக்கு அனைத்து இந்திய துருப்புக்களையும் திரும்பப் பெறுமாறு பெய்ஜிங் வலியுறுத்தி வருகின்றது. இக்கட்டானநிலை முழுவதிலும், இந்தியப் படைகள் நிபந்தனையின்றி திரும்பப் பெறப்பட வேண்டுமென்று பெய்ஜிங் கோரியது.

இந்த தொலைதூர மலை முகட்டுப் பகுதி மீது புதுடில்லி எந்தவோர் உரிமையையும் கொண்டிராத நிலையில், இந்தியாவின் தலையீடு முன் சம்பவிக்காத ஆத்திரமூட்டலாக இருந்ததென்று அது வலியுறுத்தியது,

ஆனால், உண்மையிலே சிறிய ஹிமாலய அரசான பூட்டானின் பெயரில் தலையீடு செய்தது. அதனை பல தசாப்தங்களாக புதுடில்லி ஓர் ஏவலரசாகவே நடத்தியது.

கடந்த மாதம் 28 ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாட்டில், ஹூவா, சீன எல்லைப் படைகளின் ரோந்துகள் உட்பட, டோக்லாம் மீதான அதன் பிராந்திய இறையாண்மையை நிலைநாட்டுவதை சீனா தொடரும் என்று தெரிவித்தார்.

புதுடில்லி அதன் பங்கிற்கு, பதற்ற தணிப்புக் குறித்த வரிசை முறையான தன்மையை வலியுறுத்தியது. அதே சமயம், சீனா சர்ச்சைக்குரிய பகுதியில், தனது படைகளை குறைக்கும் என்பதை சுட்டிக்காட்டியது.

ஜூன் 18 அன்று டோக்லாமை நோக்கி இந்தியா துருப்புக்களை அனுப்ப தூண்டுதலாக இருந்த விவகாரம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. தற்போது தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மலைமுகட்டுப் பகுதியில் ஒரு சாலையை விரிவுபடுத்துவதே சீனாவின் திட்டம் ஆனால், அதன் மீது பூட்டானும் உரிமை கோருகின்றது.

பூட்டான்-சீனா எல்லையின் இறுதி வரையிறுப்பு நிலுவையில் உள்ள நிலையில், சர்ச்சைக்குரிய அனைத்து பகுதிகளிலும் இதுவரையிலும் உள்ள நிலைமையை அப்படியே பேணுவதற்கான பூட்டானுடனான ஓர் ஒப்பந்தத்தை பெய்ஜிங்கின் சாலை கட்டுமானம் மீறுவதாக இந்தியா குற்றஞ்சாட்டியது.

**அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளுமே இந்தியாவிற்கான தங்களது ஆதரவை நிரூபிக்கும் வகையில் தலையீடு செய்தன.**



பல வாரங்களாக, இந்த டோக்லாம் மோதல் ஓர் ஆயுத மோதலாக வெடிக்கக்கூடிய சாத்தியக்கூறு பற்றி இந்திய மற்றும் சீன செய்தி ஊடகங்கள் முழு விவாதத்தில் மூழ்கியிருந்தன.

பல்வேறு சீன ஆய்வாளர்கள், அந்த நாட்டிற்கு சொந்தமான செய்தி ஊடகத்தில் மேற்கோளிட்டு, அத்தகைய தொரு மோதலை ஒரு குறுகிய எல்லைப் போரினால் கட்டுப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினர். இந்திய வர்ணனையாளர்கள் அடிக்கடி அக்கருத்தில் இருந்து வேறுபட்டனர்.

(கேள்வி தொடரும்)



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



93




## அத்தியாயம் - VI

## காட்டில் பிரபாகரனுடன் சந்திப்பு

காடுகளின் முரட்டுத்தனத்தை பணியவைத்து வாழ்வதற்குரியதாக தளம் அமைக்கப்பட்டு வாழ்க்கை முறையில்சுமுகப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் தான் நாம் அங்கு சென்றோம். பெரும் தொகைப் பதுங்கு குழிகள் தரைப் படுக்கையில் அமைக்கப்பட்டிருந்தன; எறிகணை வீச்சு மற்றும் குண்டு பொழிவு போன்ற ஆபத்துகள் அங்கும் நிலவுவது அதில்இருந்துதெளிவாகியது. பிரபாகரனுடைய பாசறை இடையறாது தாக்கப்பட்டது. உயிரிழப்பு அங்கே மிகக் குறைவு என்பது குறிப்பிடப்பாலது. இரண்டே இரண்டு பெண் போராளிகள் மட்டும் அந்தத் தளத்தில் உயிரிழந்திருக்கிறார்கள். உடனடியாகப் பாதுகாப்புத் தேடவேண்டும் என்றும் பீரங்கி எறிகணை வீச்சு முடியும் வரை உணவே நீரோ இன்றிப் பல மணி நேரம் பதுங்கு குழியில் இருக்கவேண்டும் என்றும் தமது போராளிகளுக்கு இடையே ஒழுக்கக் கட்டுப்பாட்டை பிரபாகரன் வலுவாக ஊட்டியமையால் உயிரிழப்பு குறைவாகவே இருந்தது.

நிலத்தின் கீழ் உள்ள எமது பதுங்கு குழித் தங்கும் இடத்தின் தன்மையையும் கட்டமைப்பையும் பார்த்த போது, இடையறாத எறிகணை வீச்சாலும், விமானக் குண்டுப் பொழிவுகளாலும் எமது போராளிகள் எத்தகைய ஆபத்துக்கு முகம் கொடுத்திருந்தார்கள் என்பதும் தெரிந்தது. நாம் காட்டிலேயே தங்கியிருந்த வேளை, இந்தியர் பீரங்கி ஷெல் அடியில் இறக்கலாம் என்ற எதிர்பார்ப்பில், தற்காப்பு நடவடிக்கையாக எமது பாதாளப் பதுங்கு குழித் தங்குமிடத்தில் நாம் தரித்திருக்க வேண்டும் என்று பிரபாகரன் கேட்டுக்கொண்டார்.

அமெரிக்காவுக்கு எதிரான வியட்நாம் விடுதலைப் போரின்போது, வியட்கொங் போராளிகளுக்குப் பாதுகாப்பும் நடமாட்ட வசதியும் வழங்கும் பொருட்டு, பல மைல்கள் நீளமான சுரங்க வழிகளையும் பதுங்கு குழிகளையும் ஆயிரம் ஆயிரம் வியட்நாமிய கெரில்லாக்கள் அகழ்ந்தமை பற்றிய வியத்தகு செயல் பற்றி நாம் படித்திருந்தோம். அத்தகைய மனித முயற்சியின், மகத்தான விந்தையை நாம் இங்கு நேரில் பார்த்தோம்.

பாதாளப் பதுங்கு குழிக்கு ஓரமாக அளவு எடுத்து அறுத்துச் செதுக்கப்பட்ட படிக்கட்டுக்கள் வழியாக ஆழத்துக்கு இறங்கும் போது இத்தகைய கடினப் பணியைச் சாதித்து முடித்த போராளிகளின் ஆற்றல், பொறுமை, கூட்டுணர்வு ஆகியவற்றை மனதாரப் பாராட்டினோம். இந்தப் படிகள் வழியாகத் தலைக்குக் கீழ் முப்பது, நாற்பது அடி நீளமான அறை ஒன்றுக்குள் போராளிகள் எம்மை இட்டுச் சென்றார்கள். இந்த நிலத்தடிச் சுரங்க அறைகளும் இந்தப் பகுதியில் நிலத்தடியில் உள்ள பாறைகளில் இருந்து செதுக்கப்பட்டிருப்பதைப் பார்த்த போது வியப்பால் திகைத்துப் போனோம். எமது அறை, எழுந்து நிற்கக் கூடிய அளவுக்கு உயரமாகவும் நடமாடுவதற்கு வசதியாகவும் இருந்தது. அந்த அறையில் இருந்து ஒடுக்கமான கருங்கல் பாதை ஒன்று சென்றது. அங்கே ஒரு சிறிய அறை கழிப்பறை நோக்கத்தோடு கட்டப்பட்டது.

பிரபாகரனுடைய அறை, எமது அறையை விட இன்னும் நிலத்தின் அடியின் கீழே அமைந்துள்ளது. பதுங்கு குழிகள் மீது தாழ்வாகச் செல்லும் கூரைகளும் நீரை வழிப்படுத்த வரம்புகளும் கட்டப்பட்டிருந்தன. கால மழை உள்ளே வந்து பதுங்கு குழிகளை ஈரமாக்காது இவை தடுத்தன. காடு முழுவதும் பருவ மழையின் போதும் அடை மழையின் போதும் சேறும் சகதியுமாக இருக்க, கொங்கிறீட்டிலும் பலமான இந்தக் கருங்கல் கட்டடம் ஈரமில்லாமல் தாக்குப் பிடித்தது. இந்த வியத்தகு கட்டட அமைப்பில் ஒரே ஒரு குறைபாடு. சாத்தியமாக இருந்தால் அதையும் தீர்த்திருப்பார்கள். ஆனால், இது அவர்கள் கட்டுப்பாட்டை மீறியது. நாம் தரைக்குக் கீழே மிக ஆழத்தில் இருந்தோம். சூரியனின் வெப்பம் அங்கே வர வாய்ப்பில்லை. இதனால் அறை அதுவும் இரவில், கடும் குளிராக இருந்தது. குளிரில் எனது எலும்புகள் வலித்தன. நீண்ட நாள்களுக்கு எப்படித் தாக்குப் பிடிக்கலாம் என்று வியந்தேன். ஆனால், தாக்குப் பிடிக்கவும் முடிந்தது; பாதக விளைவுகள் எவையும் ஏற்படவில்லை.

சமையலறைகளும் அவற்றோடு ஒட்டிய பெரிய உணவருந்தும் கூடங்களும் கட்டப்பட்டிருந்தன. ஆயுதசாலை ஒன்றில் சில போராளிகள் ஆயுதங்களைப் பழுது பார்ப்பதிலும் சீராக்குவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். ஒரு சிறிய மருந்தறையும், மருத்துவமனையும் கட்டப்பட்டிருந்தன. பாசறையின் பல்வேறு பாகங்களைத் தொடுக்கும் பாதைகளும் கட்டப்பட்டிருந்தன. குறிப்பிடப்பட வேண்டியது எதுவென்றால், ஒரு துயிலும் இல்லமும் அங்கே இருந்தது. நன்கு பேணப்பட்ட அந்த இடத்தில் சமரில் கொல்லப்பட்ட போராளிகளின் உடலங்கள் மீளாத் துயிலில் ஆழ்ந்திருந்தன.

பெண் போராளிகளும் சுறுசுறுப்பாகவே இயங்கினார்கள். பிரதான தளத்திலிருந்து சில நிமிட நடை தூரத்தில் பெண்ணம் பெரிய தளம் ஒன்றை அவர்கள் நிறுவி இருந்தார்கள். அங்கும் சமையல் கட்டு, மருந்து நிலையம், தையற்கடை, ஆயுதக் கூடம் இத்தகையவை எல்லாமே சிறப்பாக இயங்கிக் கொண்டிருந்தன. அவர்களுடைய பாசறையில் சில பகுதிகள் இராணுவப் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டிருந்தன; முழுமையான தடை தாண்டல் பயிற்சி நெறியும் இதற்கென வகுக்கப்பட்டிருந்தன. ஆய்வாளர்கள் பலரின் எதிர்பார்ப்புக்கு நேர்மாறாக, விடுதலைப்புலிகளின் ஆட்சேர்ப்பு குறையவே இல்லை. மாறாக, இயக்கத்தில் இணைகின்றமை அதிகரித்தபடியே இருந்தது. தங்கள் மகனும் மகளும் புலிகளின் அணியில் சேர்ந்தால் புலிகளின் பாசறையில் அவர்கள் உயிர் பிழைத்து வாழ்கின்றமைக்கு அதிக வாய்ப்பு உண்டு என்று பல பெற்றோர் கருதினர். மாறாக, அவர்கள் கிராமங்களில் தங்களோடு தரித்திருப்பார்களானால், இந்திய அமைதிப் படையின் கொடூரத் தாக்குதலுக்கு உள்ளாகுவதற்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் கட்டாய ஆட்சேர்ப்புக்கு ஆளாகுவதற்கும் இடமேற்படும் என்றும் பெற்றோர் அஞ்சினர். புதிய போராளிகள் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர் அடுத்த அணியில் பயிற்சி பெறுவதற்காகக் காத்திருந்தார்கள். சிறிது தூரத்துக்கு அப்பால், காட்டின் வேறொரு பகுதியில், மூத்த பெண் போராளிகளுக்கான உயர் நிலைப் பயிற்சி ஒன்று நடந்து கொண்டிருந்தது. இந்த அதிரடிப் பயிற்சிக்குப் பொறுப்பாக ஜெயந்தி இருந்தார்.

புலிகள் யாழ்ப்பாணத்துக்குத் திரும்பிய பின், பெண்கள் இராணுவப் பிரிவின் தளபதியாக, சுகியின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டார். மூத்த பெண் போராளிகளுடன் இந்த அணியில் விதுசாவும் ஒருவர். புலிப் பெண் போராளிகளின் தற்போதைய தளபதி இவரே. துணிச்சல் மிக்க இந்த இளம் பெண்களில் பலர், பல வீரச்சமர்களில் கலந்துகொண்டு, மற்றவர்களுக்கு வழி காட்டிகளாக இருந்திருக்கிறார்கள். இவர்களுடைய சாதனைப் படைப்புகள் வரலாறாய் அமைந்தன. துயர் தருவது என்னவென்றால், ஆரம்பத்தில் இடம்பெற்ற பெண்களுக்கான இந்த உயர் நிலை அதிரடிப் பயிற்சியில் பங்கெடுத்த ஒரு சிலரே இன்று உயிரோடு இருக்கிறார்கள்.

பாசறையில் கிட்டுவைக் கண்டதும் எமக்கு மகிழ்ச்சியைத் தந்தது. 1988 இல் தமிழ்நாட்டில் இருந்து நாம் தப்பிச் சென்ற சில நாள்களில் தமிழ் நாட்டில் இடம்பெற்ற ஒரு சுற்றி வளைப்பில் அப்போது, சென்னையில் இருந்த கிட்டுவும் அகப்பட்டு, பாதுகாப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் யாழ்ப்பாணத் தடுப்புக் காவலுக்கு இடமாற்றம் பெற்றார்.

ஆயினும், அவருடைய உடல் ஊனத்துக்கு வழங்கப்படும் ஒரு சலுகையாக இந்திய அமைதிப் படைத் தலைமைப்பீடம் தடுப்புக் காவலில் இருந்து அவரை விடுவித்தது. அவர் உடனடியாக முல்லைத்தீவுக் காடுகளில் இருந்த பிரபாகரனிடமும் புலிப் போராளிகளிடமும் சென்றார்.

பிரபாகரனுடன் இந்தத் தருணத்தில் உளவியல் ரீதியாக போராளிகளுக்கு உற்சாகம் ஊட்டுவதில் கிட்டு தமது தீரத்தைக் காட்டினார். புதிதாகக் கற்க வேண்டும் என்பதிலும், ஒருவர் தம்மை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதிலும் கிட்டு எப்பொழுதுமே பேரார்வம் கொண்டவர்.

போராளிகளுக்கு அவர் வகுப்புகள் நடத்தினார். அவர்களது நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டினார். நிழற்படம் பிடிப்பதில் கிட்டு சூரர். நாம் அங்கு தரித்திருந்த போது பிரபாகரனையும் எம்மையும் பல கோணங்களில் படம் பிடித்தார்.

பொட்டு அம்மானும் அலம்பிலில் இருந்தார். அந்த நேரத்தில் யாழ்ப்பாணத் தீப கற்பத்தில் களத் தளபதியாக அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். பிரபாகரனுடைய ஆலோசனைக்காக அவர் அங்கே அழைக்கப்பட்டிருந்தார். தமது காயங்களில் இருந்து முற்றாகக் குணமடைந்திருந்த பொட்டு அம்மான் யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையினருக்கு எதிராக நகர்ப்புறக் கெரில்லாப் போராட்டம் ஒன்றை வெற்றிகரமாக நடத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார். மூத்த புலிப் போராளிகளில் இன்னொருவர் கபில் அம்மான். போராட்டங்கள் பல கண்டவர் இவர். நாம் சென்னையில் இருந்த காலத்திலேயே எம்முடன் நட்பு பூண்ட நண்பர். மென்மையான, அமைதியான இளைஞர். திருகோணமலைக் காடுகளில் இருந்து எம்மைப் பார்க்க முல்லைத்தீவுக்கு வந்திருந்தார். (தொடரும்...)

காலைக்கதிர்
Kalaikkathir









தென்மராட்சி கல்வி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இளைப் பாறிச்செல்லும் சு.கிருஷ்ணகுமாரின் மணி விழா கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் ஓய்வுநிலை அதிபர் க. அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விழாக்குழு சார்பில் ஓய்வு நிலை பதிவாளர் ஜெயக்குமார் விழா நாய கனுக்கு பொன்னாடை போர்த்துகின்றமை யையும், ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபா லன் நினைவுச் சின்னத்தை வழங்குகின்றமை யையும், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தால் முன்னெடுக்கப்படும் மாணவர் களுக்கான கல்வி நிதியத்துக்கான ஒரு தொகை நிதியை விழாநாயகன், மன்றத் தலைவர் ந.சிவ பாலனிடம் கையளிக்கின்றமையையும் படங் களில் காணலாம். (ச)





ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கீழ் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 300 குடும்பங்களுக்கு புதிய நல்லின மாங் கன்றுகள் வழங்கும் செயற்றிட்டத்தின் இரண்டாம் கட்ட செயலமர்வும், மக்கள் சந்திப்பும் கடந்த சனிக்கிழமை கூமாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம்பெற்றது.

ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் கிராமிய செயற்றிட்ட இணைப்பாளர் நா.ஸ்ரீதரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் வன்னி மாவட்ட அமைப்பாளர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வடக்கு மாகாண செயற்திட்ட முகாமையாளர் ரோகண கமகே, ஐக்கிய தேசியக் கட்சியின் இளைஞர் அமைப்பாளர் சந்திரகுமார், அஸ்திரம் மக்கள் நற்பணி மன்றப் பொது செயலாளர் ந.கிருஷ்ணமூர்த்தி, ஆரம்பக் கைத்தொழில் அமைச்சின் உத்தி யோகத்தர்கள், பயனா ளிகள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ச-100)







ஐக்கிய அரபு இராச்சிய இலங்கைக்கான தூதரகத்தின் அனுசரணையுடன் காரைநகர் கோட்டப் பாடசாலைகளில் கல்வி பயிலும் ஆயிரத்து 613 மாணவர்களுக்கு கடந்த சனிக் கிழமை காரைநகர் இந்துக்கல்லூரி நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் கற்றல் உபகர ணங்கள் வழங்கப்பட்டன.

சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தலை மையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் அப்துல் ஹமீத் ஏ.கே. அல்முலா கலந்துகொண்டு மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்கினார். (ச)









தேசிய சகவாழ்வு கலந்துரை யாடல் மற்றும் அரசகரும மொழி கள் அமைச்சின் ஏற்பாட்டில் வவுனியா இலங்கை திருக் கல வன் பாடசாலையில் நடமாடும் சேவை ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல் மற் றும் அரசகரும மொழிகள் அமைச்சின் பிரத்தியேக செய லாளர் பிரியான் குணவர்த்தன, அமைச்சின் மேலதிக செயலாளர் திலகரட்ண, தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் ஆணைக் குழுவின் தலைவர் ரஞ்சிதா வியாங்கொட, உதவி செயலாளர் சி. மதிவாணன், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார், பிரதேச செய லாளர் கா.உதயராஜா, பிரதிப் பிரதேச செயலாளர் சாரதா தேவி மற்றும் அரச ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

இந்த நடமாடும் சேவையில் பிறப்புச் சான்றிதழ் வழங்கல் , விவாகமாகாத தம்பதியினருக்கு புதிதாக விவாகம் செய்து வைத் தல், தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ளுவதற்கான ஆரம் பக் கட்ட நடவடிக்கை, அரச காணி மற்றும் கமநல சேவை தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு, ஓய்வூதியம் போன்ற பல் வேறு சேவைகளை மக்கள் பெற்றுக்கொண்டனர். (ச-100)



# கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில் கிருஷ்ணனின் கிருபை பெறுவோம்!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற காத்தற் கடவுளாகிய எல்லாம்வல்ல ஸ்ரீமகா விஷ்ணு மூர்த்தியின் அவதாரமே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. ஆதலால் இன்றைய கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில் கிருஷ்ணனைப் பணிந்து வணங்கி, அவனுடைய கிருபையைப் பெற்று நல்வாழ்வு வாழ நாம் வழி வகுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் கிருபா கடாட்சம் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டுமாயின் நாம் அவரைப் பணிந்து வணங்கி அவன் புகழைப் பாடிப் பணிதல் வேண்டும். இன்று நள்ளிரவு 12 மணிக்குக் கண்ணன் பிறக்கின்றான். அவனது கருணைக்கு எல்லையே இல்லை. ஆகவே, அவனை வணங்கி வளம்பல பெறுவோம்.

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நாள் அதாவது இன்றைய திருநாள் ஒரு புனிதம் நிறைந்த புண்ணியப் பெரு நாளாகக் கருதப்படுகின்றது. எல்லாம் வல்ல பரம்பொருளான கிருஷ்ண பகவானின் ஜனன தினம் இதுவாகும். இந்தக் கிருஷ்ண ஜெயந்தி தினம் ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்திலே வருகின்ற கிருஷ்ண பட்சத்து அட்டமித் திதி வரும் நாளில் ரோகினி நட்சத்திரமும் இணைந்து நிற்கும் இரவுப் பொழுதைக் குறித்து நிற்கின்றது.

இவ்வாறு அட்டமித் திதியும் ரோகினி நட்சத்திரமும் அதாவது, 'ஆவணி ரோகினி' எனப்படுகின்ற புனித நன்னாளும் சேர்ந்து, ''ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி'' யாகப் பெருவிழா எடுக்கப்படுகின்றது. கோலாகலமான இவ்விழாவில் நாம் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். அது நல்ல பலனைக் கொடுக்கும்.

பெருமாள் கோயில்களிலே இன்றைய ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தினம் மகோன்னதம் நிறைந்த மங்கல நாளாகக் கருதப்பட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கு விசேட அபிஷேகங்கள், ஆராதனைகள், பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெறும். அடியார்கள் பலரும் பெரும் எண்ணிக்கையிலே ஒன்று கூடி ஒருங்கு திரண்டு நின்று பகவானை வழிபாடியற்றி மகிழ்வர்.

இன்றைய, 'கிருஷ்ண ஜெயந்தி' தினத்தில் விரதம் இருக்க விரும்பும் அடியார்கள் அதிகாலையிலேயே நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களையெல்லாம் முதலில் முடித்துக் கொள்ள வேண்டும். பின்பு குளிர்ந்த சுத்தமான நீரிலே குளித்துத் தோய்த்துலர்ந்த வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு சதா சர்வகாலமும் ஸ்ரீ கிருஷ்ண பகவானை மனத்திலே தியானித்து எண்ணியவாறு சந்தியா வந்தனம் முடித்து, இறை சிந்தனையுடன் பகல் முழுவதும் பகவான் தோத்திரங்களைப் பாராயணஞ் செய்து கொள்ள வேண்டும். இன்று இரவு கிருஷ்ணன் பிறக்கும் நேரமான நள்ளிரவு 12 மணிக்கு பெருமாள் கோயில்களிலே ஸ்ரீ கிருஷ்ணனுக்கு நடைபெறுகின்ற பூசை, ஆராதனை வழிபாடுகளில் கலந்து கொண்டு அங்கு நிகழ்கின்ற ''கண்ணன் தாலாட்டு'' நிகழ்விலேயும் பக்தி பூர்வமாகக் கலந்து கொள்ள வேண்டும். கண்ணன் பிறந்ததும் தாலாட்டுப் பாடுவது வழக்கமாகும்.

ஸ்ரீ கிருஷ்ணன் அவதாரம் எடுத்தது பூமி பாரம். அதாவது பூமாதேவியுடைய பாரத்தைக் குறைப்பதற்கேயாகும். அதன் உள்ளார்த்தமாகவே ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவானவர் பஞ்ச பாண்டவர்களுடன் இணைந்து மகாபாரத யுத்தத்தைத் தோற்றுவித்து திருவிளையாடல் புரிந்தார் என்று வரலாறு பேசுகின்றது.

காத்தற் கடவுளாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா தம்மை நினைத்து மனமுருகி வழிபாடியற்றுபவர்களுக்கு மங்கலம் நிறைந்த நல்வாழ்க்கையை அருளுவார். அதிலும் இன்றைய 'கிருஷ்ண ஜெயந்தி' நன்னாளில் நோன்பிருந்து விரதம் காத்து எந்நேரமும் கண்ணனையே நினைந்து, நாலாயிரம் திவ்விய பிரபந்தம், திருவாய்மொழி, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகியவற்றை மனம் பொறி வழி செல்லாது அகத்தையடக்கி, வழிபாடியற்றி பாராயணஞ் செய்தால் பகவான் பத்மமலர்ப்பாதத்தை நமக்கு அருளுவார் என்று நம்பப்படுகிறது.

> ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நாள் அதாவது இன்றைய திருநாள் ஒரு புனிதம் நிறைந்த புண்ணியப் பெரு நாளாகக் கருதப் படுகின்றது. எல்லாம் வல்ல பரம் பொருளான கிருஷ்ண பகவானின் ஜனன தினம் இதுவாகும்.

ஆகவே, இன்றைய ஆவணி மாத அட்ட மித்திதியுடன் கூடிய ரோகினி நடசத்திரமும் கூடிய மங்கல வாரத்திலே விஷ்ணுவின் அடியார்களும் கண்ண பரமாத்மாவின் பக்தர்களும் பெருமாள் கோயிலிலே நடக்கின்ற கிருஷ்ண ஜெயந்தி நிகழ்வுகளிலே கலந்து கொண்டு புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெற்றுக் கொள்ளலாம்.

தெய்வத் தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# சீனா- இலங்கைக்கு சலுகையற்ற கடன்!

## அமெரிக்கா கவலை



சீனாவிடம் இருந்து இலங்கை அரசு சலுகையற்ற ரீதியில் பெற்றுக்கொண்டுள்ள கடன் தொடர்பில் அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது.

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான உதவி வெளிவிவகார அமைச்சர் அலிஸ் வேல்ஸ், தெற்காசியா தொடர்பான காங்கிரஸ் உபகுழு முன்னிலையில் ஆஜராகி இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையின் உள்ளக அபிவிருத்திகளுக்கு பில்லியன் கணக்கான டொலர்களை சீனா முதலீடு செய்கின்றது. இந்நிலையில் சீனாவிற்கு கடனை மீளச் செலுத்துவதற்கு இலங்கை திண்டாடுகின்றது.

இந்த நிலையில், சீன அரசால் நிர்வகிக்கப்படும் நிறுவனம் ஒன்று அம்பாந் தோட்டை துறைமுகத்தின் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது.

இதன்படி, 1.1 பில்லியன் டொலர் உடன்படிக்கையில் சீன நிறுவனம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவுள்ளது. அத்துடன், சீனா இலங்கைக்கு சலுகையற்ற கடன்களை வழங்கி வருகின்றது.

அது நீடித்த கடன் சுமையை அதிகரிக்கின்றது. இந்த விடயம் இலங்கை அரசு, மக்களுக்கும் கவலையளிக்கிறது என்றும் அலிஸ் வேல்ஸ் காங்கிரஸ் உபகுழு முன்னிலையில் கூறியுள்ளார்.

இதனிடையே, இலங்கைக்கான கடன் உதவியை அமெரிக்கா 92 வீதத்தால் குறைத்துள்ளது.

இலங்கையில் நாங்கள் அதிகளவில் மானிய உதவிகளை வழங்கி வருகின்றோம். இதேவேளை, பலதரப்பட்ட விடயங்களின் ஊடாக நாம் எமது உறவை ஏற்படுத்தி வருகின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வாகன விபத்துக்களில் 1,800 பேர் மரணம்!

கொழும்பு, செப். 12

கடந்த எட்டு மாத காலப் பகுதியில் வாகன விபத்துக்களால் ஆயிரத்து 800 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் தலைவர் வைத்தியர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு அவர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய பெரிய வாகன விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை 1708 ஆகும். வாகன விபத்துக்களில் அதிகளவில் பாதசாரிகளும், மோட்டார் சைக்கிள்களில் செல்வோருமே உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக கடந்த எட்டு மாத காலப் பகுதியில் 533 பாதசாரிகளும், 586 மோட்டார் சைக்கிளில் பயணித்தோரும் உயிரிழந்துள்ளனர். அதேவேளை, வாகனவிபத்துக்களினால் 142 சாரதிகள் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் காலப்பகுதியில் 233 முச்சக்கர வண்டி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 214 ஆகும். நாள் தோறும் சராசரியாக வீதி விபத் துக்களில் 8 பேர் உயிரிழப்பதுடன் 20 பேர் வரையில் காயமடைகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# பண மதிப்பு இழப்புத் தோல்வியை ஏற்றுக்கொள்வாரா மோடி?

## கேள்வி எழுப்புகிறார் முன்னாள் நிதி அமைச்சர்



மும்பை, செப். 12

ஒரு தவறான முடிவை எடுப்பதற்குத் தைரியம் தேவையில்லை. ஆனால், 'நான் ஒரு தவறான முடிவை எடுத்தேன்' என்று ஒப்புக்கொள்வதற்குத் தைரியம் தேவை. ரூபாத் தாள்களைத் திரும்பப் பெற்றமை தவறான முடிவாகும். 'அந்தத் தவறை நான் செய்து விட்டேன்' என்று ஏற்றுக்கொள்ளும் தைரியம் பிரதமருக்கு இருக்கின்றதா?

-இவ்வாறு முன்னாள் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கேள்வி எழுப்பி உள்ளார்.

மும்பையில் வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தியப் பொருளாதாரம் தற்போது சந்தித்து வரும் பிரச்சினைகளுக்கு ரூபாத் தாள்களைத் திரும்பப் பெற்றமை தான் காரணம். இந்த நடவடிக்கையின் விளைவாக 15 லட்சம் வேலை வாய்ப்புகள் பறிபோயுள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் 1.4 சதவீதம் என்ற அளவுக்கு சரிவு ஏற்பட்டது. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டன.

மறைமுகமாக மத்திய அரசு தனது தோல்விகளை ஒப்புக் கொண்டுள்ளது. சிறு, குறு, நடுத்தரத் தொழில்துறை அமைச்சர் கல்ராஜ் மிஸ்ரா நீக்கப்பட்டார். திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் நீக்கப்பட்டார். இதற்குத் திறன் மேம்பாட்டு லட்சியமும், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் முயற்சியும் தோல்வியடைந்து விட்டது என்றுதான் அர்த்தம். தொழிலாளர் நலக் கொள்கைகள் தோல்வியடைந்தமையால்தான் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நீக்கப்பட்டுள்ளார்.

நாடு தற்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. அரசின் தவறான கொள்கைகளின் சுமையை இளைஞர்கள் அனுபவித்து வருகின்றனர்.

ஆண்டுதோறும் 1.2 கோடி பேர் வேலை வாய்ப்புக்குத் தயாராகின்றனர். ஆனால், போதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதில்லை.

கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தின் போது மேலும் பல அமைச்சர்கள் நீக்கப்பட்டிருக்க வேண்டும்.

குறிப்பாக வேளாண்துறையில் ஏற்பட்ட தோல்விகளைத் தொடர்ந்து அந்தத் துறைப் பதவியைப் பறித்திருக்க வேண்டும். ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவு காரணமாக வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் நீக்கப்பட்டிருக்க வேண்டும்.

பொருளாதார நிலைமையை முன் வைத்து பிரதமர் பதவி விலக வேண்டும் என்று கோருவீர்களா? என்று பலரும் கேட்கின்றனர். பிரதமரைப் பதவி விலகுமாறு கோருகின்றமை சுலபமல்ல. தொழில்துறை, திறன் மேம்பாட்டுத் துறை, சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறை ஆகியவற்றின் கொள்கைகள் தோற்றுவிட்டன என்று கருதியமையால் தான் அத்துறைகளைக் கவனித்து வந்த மூன்று அமைச்சர்களையும் பிரதமர் நீக்கியுள்ளார்.-என்றார். (ச)

## பழம்பெரும் நடிகை பி.வி. ராதா காலமானார்!



பழம்பெரும் நடிகை பி.வி. ராதா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தனது 69 ஆவது வயதில் மாரடைப்பால் உயிரிழந்தார்.

1964 ஆம் ஆண்டு 'நவகோடி நாராயணா' என்ற கன்னடப் படத்தின் மூலம் பி.வி. ராதா சினிமாவில் அறிமுகமானார். அதன்பின் தமிழ், தெலுங்கு மற்றும் கன்னடம் மொழிகளில் நடித்த பெருமை பெற்றவர். இதுவரை அவர் சுமார் 250 படங்களுக்கு மேல் நடித்துள்ளார். எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசன், ஜெய்சங்கர் உட்பட பல ஹீரோக்களுடனும் அவர் நடித்துள்ளார். கடந்த இரண்டு வருடங்களாக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. உடனே அவர் பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். மருத்துவமனையில் சுவாசிக்க முடியாமல் திணறி வந்த ராதா உயிரிழந்தார். .

நடிகை ராதாவின் உடல் அவரது ஆசைப்படி மருத்துவ கல்லூரிக்கு தானமாக வழங்கப் பட்டுள்ளது. (ச)

### 'மாதவிடாய் காலத்தில் கோயிலுக்குச் சென்றேன்'

## பெண் எழுத்தாளரின் செவ்வியால் சர்ச்சை!



'மாதவிடாய் காலத்தில் கோயிலுக்குச் சென்றேன்' என இந்தியப் பெண் எழுத்தாளர் ஒருவர் பேட்டி அளித்தமை சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

எழுத்தாளர் காஜல் ஓஜா வைத்தியா மாதவிடாய்க் காலத்தில் பெண்கள் சந்திக்கும் இன்னல்கள் மற்றும் சவால்கள் குறித்து பெண்கள் பேசும் 'Letstalk periods' எனும் பி.பி.சி. தொடரில் செவ்வி அளித்துள்ளார்.

அதில், 'மாதவிடாய் காலத்தில் பெண்களுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகள் மற்றும் மூடநம்பிக்கைகளை நான் ஒருபோதும் விரும்புவதில்லை. மாதவிடாய் காலத்தில் நான் கோயிலுக்குச் சென்றேன்.' என்று கூறியிருந்தார்.

இவரின் இந்தக் கருத்துக்கு 'இதுபோன்ற செயல்களால் இந்துக்களின் கொள்கை மீறிப்பட்டுள்ளது' என சமூக வலைத் தளங்களில் பலரும் எதிர்வினை ஆற்றியுள்ளனர்.



## 'நடிகர் கமல் ஆடம்பர முட்டாள்!'

சுவாமி கூறுகிறார்

நடிகர் கமல்ஹாசன் ஒரு ஆடம்பர முட்டாள் என பா.ஜ.க மூத்த தலைவர்களில் ஓர்வரான சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

சுப்பிரமணிய சுவாமி தனது ட்விட்டரில், கமலஹாசன் ஓர் 'ஆடம்பர முட்டாள்' அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர உள்ளார் என எனக்குத் தெரிய வந்துள்ளது' - எனப் பதி விட்டுள்ளார்.

நடிகர் கமலஹாசன் தொடர்ந்தும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் கருத்துக்களைக் கூறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அ.தி.மு.க. பொதுக்குழு கூடுவதற்கு தடையில்லை: தினகரனுடைய ஆதரவாளர் மனு தள்ளுபடி!



அ.தி.மு.க அம்மா மற்றும் புரட்சித்தலைவி அம்மா அணிகள் இணைந்து பொதுக் குழு கூட்டுவதற்கு தடை விதிக்கக் கோரிய மனுவை சென்னை உயர் நீதிமன்றம் நேற்று திங்கட்கிழமை தள்ளுபடி செய்துள்ளது.

பொதுக்குழு கூட்டுவதற்கு பொதுச்செயலாளர் மற்றும் துணைப் பொதுச்செயலாளருக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என்பதால் பொதுக்குழுவுக்கு தடை விதிக்க வேண்டும் என டி.டி.வி தினகரன் ஆதரவாளர் சட்டமன்ற உறுப்பினர் வெற்றிவேல் சென்னை உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த நிலையில் மேற்படி மனு, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, வெற்றிவேல் தனிப்பட்ட முறையிலேயே இந்த வழக்கைத் தொடர்ந்துள்ளார் எனவும், அவர் விருப்பப்பட்டால் பொதுக்குழுவில் கலந்து கொள்ளலாம்; இல்லையென்றால் வீட்டில் இருக்கலாம் என்றும் நீதிபதி எச்சரித்துள்ளார். மேலும், நீதிமன்ற நேரத்தை வீணடித்த காரணத்தால் வெற்றிவேலுக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய படையினர் வான் தாக்குதல்: சிரியாவில் 34 பொதுமக்கள் சாவு!

பெய்ரூட், செப். 12

சிரியாவில் ரஷ்யப் படையினர் நடத்திய வான் தாக்குதலில் சிக்கி, அப்பாவிப் பொதுமக்கள் 34 பேர் கொல்லப்பட்டனர். 12 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

அங்குள்ள ஆற்றில் இருந்து கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என சிரிய போர் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.



இதில் படுகாயம் அடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிரியாவில் கடந்த 2011ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதுவரை அங்கு 3 லட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இங்குள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கையில் ரஷ்யாவும் இணைந்து செயற்பட்டு வருகிறது. இது போன்ற தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்களும் கொல்லப்படுகின்றமை அங்கு வழக்கமாகி உள்ளது.

இது தொடர்பில் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தவை வருமாறு:-

'' சிரியாவின் டேர் எஸ்ஸர் நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகளைக் குறிவைத்து எமது நாட்டு விமானப்படை தாக்குதல் நடத்தியது. ஆனால், இந்தத்தாக்குதலில் பொதுமக்களே கொல்லப்பட்டனர். ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக்கைகள் தொடரும்'' - எனத் தெரிவித்துள்ளது. (ச)

## பாகிஸ்தானில் நீரில் மூழ்கி 13 சுற்றுலா பயணிகள் பலி!

பாகிஸ்தான்,செப். 12

பாகிஸ்தான் கராச்சிக் கடலில் நீராடிய சுற்றுலாப் பயணிகள் 13 பேர் , நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் கடலில் நீராடிக் கொண்டிருந்தபோதே, இந்த அசம்பாவிதம் இடம் பெற்றுள்ளது.

இவர்கள் உயிரிழந்தமைக்கு சிந்து மாகாண ஆளுநர் தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளார். (ச)

## வரதட்சணைப் பணத்துக்காக 11 ஆண்களை மணந்த பெண்!

### தாய்லாந்தில் விநோதம்



தாய்லாந்தில் வரதட்சணை பணத்துக்காகப் பெண் ஒருவர் 11 ஆண்களைத் திருமணம் செய்துள்ளார்.

தாய்லாந்தில் உள்ள நங் ஹாய் மாகாணத்தை சேர்ந்தவர் ஜரியாபார்ன் புயாய் (வயது-32). இவருக்குத் திருமணமாகி விட்டது. இந்த நிலையில், இவர் பணம் சம்பாதிக்க புதிய முறையைக் கையாண்டாள்.

தாய்லாந்துப் பாரம் பரியப்படி திருமணம் செய்யும் பெண்ணுக்கு ஆண் வரதட்சணைப் பணம் வழங்கவேண்டும்.

எனவே, பணம் சம்பாதிக்க ஜரியாபார்ன் திருமண மோசடியைக் கையாண்டுள்ளார்.

11 ஆண்களைத் தொடர்ந்து திருமணம் செய்த ஜரியாபார்ன், அவர்களிடம் இருந்து வரதட்சணையாக 4 லட்சம் ரூபா முதல் 20 லட்சம் ரூபா வரை வசூலித்துள்ளார்.

பின்னர் ஏதாவது ஒரு காரணம் கூறி அவர்களுடன் சேர்ந்து வாழாமல் பிரிந்து விடுவாராம்.

இந்த நிலையில், அவரிடம் ஏமாந்த ஆண்கள் பொலிஸில் முறைப்பாடு செய்தமையை அடுத்து. அவர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (ச)

## புளோரிடா மாநிலத்தை சூறையாடியது 'இர்மா'!






நியூயோர்க், செப். 12

அத்திலாண்டிக் கடலில் உருவான 'இர்மா' புயல் கரீபியன் தீவுகளை அடுத்து, அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை தாக்கியது.

இதில் சிக்கி உயிரிழந்தவர்களில் மூவரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என வானிலை மைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே இர்மா புயல் கரீபியன் கடலில் உள்ள தீவு நாடுகளைத் தாக்கியதில், அங்கு 25பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில், புளோரிடாவுக்குள் மையம் கொண்டமையால், அங்கு பலத்த காற்றுடன் தொடர் மழை பெய்து வருகிறது.

இந்தக் காற்று சூறைக் காற்றாக மாறும் என்று முன்னரே எச்சரிக்கைகள் விடப்பட்ட நிலையில், இந்தப் புயல் புளோரிடா மாகாண மேற்குக் கரையில் உள்ள நேப்பல்ஸ் பகுதிக்கு தெற்கே கடுமையான சேதங்களை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு மணிக்கு 169 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசியது. இது இரண்டாம் நிலைப் புயலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

புளோரிடா மாநிலத்தில் 25 லட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மியாமி நகரின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

புளோரிடா மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் வாழும் சுமார் 70 லட்சம் மக்களை வசிப்பிடங்களில் இருந்து வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தங்குமாறு அமெரிக்காவின் பேரிடர் மற்றும் அவசரகால நிவாரண முகமை வலியுறுத்தி உள்ளது. நிவாரண முகாம்களில் சுமார் 2 லட்சம் பேர் தஞ்சம் அடைந்துள்ளனர்.

புயல் நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகள் தொடர்பாக வொஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், 'இர்மா' புயல் மிகப்பெரிய பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என மக்களை எச்சரித்துள்ளார்.

'இர்மா' புயல் படிப்படியாக நகர்ந்து ஜோர்ஜியா, கரோலினாஸ் மாகாணங்களையும் அடுத்த வாரம் தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், அங்கு பலத்த மழையும் வெள்ளப் பெருக்கும் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான அஞ்சலோட்டப் போட்டி:

# வாகை சூடியது வளல ரத்னாயக்க மகா வித்தியாலயம்!




(கங்கா)

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான அஞ்சலோட்டப் போட்டியில் வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயம் பெண்கள் பிரிவில் முதலிடத்தையும், ஆண்கள் பிரிவில் மூன்றாமிடத்தையும் பெற்று மொத்தமாக 172 புள்ளிகளைப் பெற்று தேசிய அஞ்சலோட்டச் சம்பியன் ஆகியது.

கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கம் ஆகியன இணைந்து தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான அஞ்சலோட்ட போட்டிகளை நடத்தி வருகின்றன.

அதில் இந்த வருடத்துக்கான போட்டி கடந்த 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையில் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த அஞ்சலோட்ட போட்டிகளுக்கு, நெஸ்லே நிறுவனம் அனுசரணை வழங்கியது. வடமாகாண கல்வி அமைச்சு போட்டிகளை ஒழுங்குபடுத்தி நடத்தியது.

இந்தப் போட்டியில் 164 ஆண்கள் பாடசாலை அணிகளும், 138 பெண்கள் பாடசாலைகள் அணிகளுமென மொத்தமாக 302 பாடசாலை அஞ்சலோட்ட அணிகள் பங்குபற்றின.

12, 14 மற்றும் 16, 18, 20 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில், 4X50, 4X100, 4X200, 4X400, 4X800 மீற்றர்கள் என்ற அடிப்படையில் போட்டிகள் இடம்பெற்றன.




**4X100 மீற்றர் ஓட்டம்**

12 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை நீர்கொழும்பு அவே மரியா கன்னியர் மடமும், இரண்டாமிடத்தை கண்டி மகாமய மகளிர் வித்தியாலயமும், மூன்றாமிடத்தை நாவலப்பிட்டி சென்.அன்ட்றூஸ் மகளிர் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

12 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கண்டி திரித்துவக் கல்லூரியும், இரண்டாமிடத்தை நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியும், மூன்றாமிடத்தை மாத்தறை ராகுல கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

14 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை நாவலப்பிட்டி ஜனாதிபதி மகளிர் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை பனிப்பிட்டிய தர்மபால வித்தியாலயமும், மூன்றாமிடத்தை இரத்தினபுரி சுமண மகளிர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

14 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு புனித பேதுருகல்லூரியும்,இரண்டாமிடத்தை கொழும்பு புனித ஜோசப் கல்லூரியும், மூன்றாமிடத்தை மாத்தறை ராகுல கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கண்டி நல்லாயன் கன்னியர்மடமும், மூன்றாமிடத்தை பனிப்பிட்டிதர்மபால வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு புனித பெனடிக்ட் கல்லூரியும், இரண்டாமிடத்தை கல்கிஸ்ஸை புனித தோமியர் கல்லூரியும், மூன்றாமிடத்தைக் கண்டி திரித்துவக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கொழும்பு மோஸஸ் மகளிர் கல்லூயுரிம், மூன்றாமிடத்தை வளல ரத்னாயக்க கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு புனித பெனடிக்ஸ் கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு றோயல் கல்லூரியும், மூன்றாமிடத்தை மாத்தறை ராகுல கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு புனித பெனடிக்ட் கல்லூரியும், மூன்றாமிடத்தை திரித்துவக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை அம்பாகமுவ மத்திய கல்லூரியும், இரண்டாமிடத்தை வளல ரத்னாயக்க கல்லூரியும், மூன்றாமிடத்தை இரத்தினபுரி சுமண மகளிர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

**4X200 மீற்றர் ஓட்டம்**

14 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை நாவல ஜனாதிபதி பாலிக்க வித்தியாலயமும், இரண்டாமிடத்தை ரத்னபுர சுமண பாலிக்க வித்தியாலயமும், மூன்றாமிடத்தை மகுஸ்ஸாவெவ சிறி ரத்ன நாபல மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

14 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தைக் கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியும், இரண்டாமிடத்தை கேகாலை சேர் ஜோன் கொத்தலவாவ கல்லூரியும், மூன்றாமிடத்தைக் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரியும், மூன்றாமிடத்தை கண்டி குட் செபரேட் கொன்வன்ட்டும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரியும், இரண்டாமிடத்தை மவுண்டன் லவினியா சென்.தோமஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவ கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ஏ ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தைக் கொழும்பு மியூசியஸ் பெண்கள் கல்லூரியும், மூன்றாமிடத்தைக் குருணாகல் சேர்.ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு றோயல் கல்லூரியும், மூன்றாமிடத்தை நீர் கொழும்பு மேரிஸ்ரெல்லா கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரியும், இரண்டாமிடத்தை நீர்கொழும்பு மேரிஸ் ரெல்லா கல்லூரியும், மூன்றாமிடத்தைக் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

(17 ஆம் பக்கம் பார்க்க...)






காலைக்கதிர் Kalaikkathir



# வாகை சூடியது...




(16 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

20 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ஏ ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை அம்பேகமுவ மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை ரத்னபுர சுமண பாலிக்க வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

**4x400 மீற்றர் ஓட்டம்**

16 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ஏ ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தைக் குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தைக் ஹொரண ரக்ஸிலா மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரியும், இரண்டாமிடத்தை வளல ஏ ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தைக் கண்டி ரினிற்றி கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ஏ ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தைக் குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை மகுஸாவெவ சிறி ரத்னனபால மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரியும், மூன்றாமிடத்தை கண்டி சென்.சில்வெஸ்ரர் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை அம்பேகமுவ மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை வெலிமட மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தை நீர்கொழும்பு மேரிஸ் ரெல்லா கல்லூரியும், இரண்டாமிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரியும் பெற்றுக்கொண்டன.




**4x800 மீற்றர் ஓட்டம்**

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கண்டி சென்.சில்வெஸ்ரர் கல்லூரியும், மூன்றாமிடத்தை வென்னப்புவ சென். ஜோசப் வாஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை மகுஸ்ஸாவெவ சிறி ரத்னனபல மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை வெலிமட மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை நீர்கொழும்பு மாரிஸ் ரெல்லா கல்லூரியும், மூன்றாமிடத்தை கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை வெலிமட மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை அம்பேகஸ்டோவ மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

**கலப்பு அஞ்சலோட்டம்**

16 வயதுப்பிரிவு பெண்களில் முதலிடத்தை குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை நாவல ஜனாதிபதி பாலிக்க வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

16 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரியும், இரண்டாமிடத்தை வென்னப்புவ சென்.ஜோசப் வாஸ் கல்லூரியும், மூன்றாமிடத்தை கண்டி ரினிற்றி கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை குருணாகல சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை கொழும்பு மீயுசியஸ் பெண்கள் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு சென். பெனடிக்ற் கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு றோயல் கல்லூரியும், மூன்றாமிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை அம்பேகமுவ மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை ரத்னபுர சுமண பாலிக்க வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு சென்.பெனடிக்ற் கல்லூரியும், இரண்டாமிடத்தை நீர்கொழும்பு மேரிஸ்ரெல்லா கல்லூரியும், மூன்றாமிடத்தை ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

அனைத்து அஞ்சலோட்ட போட்டிகளின் அடிப்படையில் ஒவ்வொரு வயதுப் பிரிவில் முதலிடம் பெற்ற அணிகளுக்கு கேடயங்கள் வழங்கப் பட்டன. அதனடிப்படையில், 12 வயதுப் பிரிவு ஆண்களில் கண்டி ரினிற்றி கல்லூரியும், பெண்களில் நீர்கொழும்பு ஆவே மரியா கன்னியர்மடமும், 14 வயதுப் பிரிவு ஆண்களில் கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியும், பெண்களில் நாவல ஜனாதிபதி பாலிக்க வித்தியாலயமும், 16 வயதுப் பிரிவு ஆண்களில் பன்னிப்பிட்டிய தர்மபால வித்தியாலயமும், பெண்களில் குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும். 18 வயதுப்பிரிவு ஆண்களில் கொழும்பு சென்.பெனடிக்ற் கல்லூரியும், பெண்களில் வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், 20 வயதுப்பிரிவு ஆண்களில் நீர்கொழும்பு மேரிஸ்ரெல்லா கல்லூரியும், பெண்களில் வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

ஒவ்வொரு பாலாருக்குமான வெற்றியாளர்கள் மற்றும் ஒட்டுமொத்தப்புள்ளிகளின் அடிப்படையிலான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆண்கள் பிரிவில் 83 புள்ளிகளைப் பெற்ற சென்.பெனடிக்ற் கல்லூரி முதலிடத்தையும், 71 புள்ளிகள் பெற்ற நீர்கொழும்பு மேரிஸ்ரெல்லா கல்லூரி இரண்டாமிடத்தையும், 60 புள்ளிகளைப் பெற்ற வளல ஏ ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் பிரிவில் 112 புள்ளிகளைப் பெற்ற வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயம் முதலிடத்தையும், 66 புள்ளிகளைப் பெற்ற குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், 42 புள்ளிகளைப் பெற்ற ரத்னபுர சுமண பாலிக்க வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

அனைத்துப் புள்ளிகளின் அடிப்படையில் வளல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயம் 172 புள்ளிகளைப் பெற்று சம்பியனாகியது. இரண்டாமிடத்தை 79 புள்ளிகள் பெற்ற குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது. மூன்றாமிடத்தை 64 புள்ளிகள் பெற்ற பன்னிப்பிட்டி தர்மபால கல்லூரியும் பெற்றுக்கொண்டன. ★






## 20ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அரசமைப்புத் திருத்தம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் முடிவு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அந்தப் பரிந்துரையை சபாநாயகர் எதிர்வரும் 20 ஆம் திகதி சபையில் அறிவிப்பார்.

சாதாரணமாக நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இதனை நிறைவேற்றினால் போதும் என உயர் நீதிமன்று பரிந்துரைக்குமானால் அடுத்த சில தினங்களுக்குள்ளேயே இந்தத் திருத்தச் சட்டமூலம் பற்றிய விவாதத்தை நடத்தி அதனை அங்கீகரிக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசுத் தரப்பு துரிதமாக எடுக்கும் எனத் தெரிகின்றது.

இந்த மாத முடிவுக்குள் இந்தத் திருத்தத்தை அரசு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அது தொடர்பான சட்டவடிவத்தில் சபாநாயகர் ஒப்பமிடாவிட்டால் –

அடுத்த மாத முற்பகுதியில் தற்போது பதவிக் காலம் காலாவதியாகும் கிழக்கு, வடமத்தி மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பை தேர்தல் திணைக்களம் விடுத்து, அந்தத் தேர்தல் பணியை ஆரம்பித்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## 4 நாள்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களிலும் –

நாளை வவுனியா, மாத்தளை, அம்பாறை, பதுளை, மொனராகல மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் –

14ஆம் திகதி அனுராதபுரம், குருநாகல், இரத்தினபுரி, காலி ஆகிய மாவட்டங்களிலும் –

15ஆம் திகதி புத்தளம், கம்பஹா, கேகாலை, கொழும்பு மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் –

வேலை நிறுத்தப் போராட்டம் நடக்கும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## அங்கீகாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போக்கு மாற்றம் நிகழ்ந்தது. கிழக்கு மாகாண சபையும், மேல் மாகாண சபையும் அந்த இருபதாவது திருத்தத்துக்கு நேற்று அங்கீகாரம் வழங்கின.

மேல் மாகாண சபையில் முன்னர் இதே விடயத்துக்காகப் பெரும் களேபரமே நடந்தது.

ஆனால் நேற்று இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவாக 45 வாக்குகளும் எதிராக 28 வாக்குகளும் விழுந்தன.

அதனால் 17 மேலதிக வாக்குகளினால் திருத்தத்துக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.

**கிழக்கில்**

ஏற்கனவே கிழக்கு மாகாண சபையிலும் இவ்விடயம் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்த நிலையில், நேற்று இந்த விடயத்தை ஒட்டி வாக்கெடுப்பு நடத்தப்படுவதாக இருந்தது.

காலையில் சபை கூடும் வேளையில் சபையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எவரும் சமுகமளிக்காமையால் 11 மணி வரை சபை ஒத்தி வைக்கப்பட்டது.

11 மணிக்கு எதிரணி உறுப்பினர்களுக்கு மேலதிகமாக ஆளும் தரப்பில் ஓர் உறுப்பினர் மட்டுமே சமுகம் தந்தமையால் கூட்டம் பிற்பகல் 1 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் ஒரு மணிக்கு சபை கூடியபோது இரு தரப்பு உறுப்பினர்களும் சமுகம் தந்தனர். விடயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 25 வாக்குகளும் எதிராக 08 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும், ஐ.ம.சு.கூட்டமைப்பைச் சேர்ந்த சில உறுப்பினர்களும் இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எதிரணியைச் சேர்ந்த 10 உறுப்பினர் 08 பேர் எதிராக வாக்களித்தனர். மற்றைய இருவரில் ஒருவர் ஆதரவாக வாக்களித்தார். மற்றொருவர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. (உ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணாமற்போனோர் பணியகத்தை இலங்கை உடனடியாக செயற்படுத்த வேண்டும் என்றும், ஏனைய நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 36 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஜெனீவாவில் ஆரம்பமானது. இந்தக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பணியகத்தை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும். அத்துடன், இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக இழுபறிப்படும் வழக்குகளுக்குத் தீர்வுகாணல் உள்ளிட்ட ஏனைய நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்ப புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும்.

வடக்கில் பாதிக்கப்பட்டவர்கள் நடத்தும் எதிர்ப்புப் போராட்டங்கள், மெதுவாக நடக்கும் சீர்திருத்தங்கள் அவர்களின் ஏமாற்றத்தை அதிகரிக்கச் செய்து வருவதை சுட்டிக்காட்டுகின்றன. 30/1 தீர்மானத்தின் போது அளித்த வாக்குறுதிக்கு அமைய, நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளை உருவாக்குவதற்காக செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தை ஊக்குவிக்கிறேன். அத்துடன், இதனையும் ஏனைய வாக்குறுதிகளையும் நடைமுறைப்படுத்த தெளிவான காலஎல்லை ஒன்றை வகுக்க வேண்டும் என்றும் கோருகிறேன்.

இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றுவதை, கவுன்ஸிலைச் சமாதானப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக அரசாங்கம் கருதக் கூடாது. அதன் எல்லா மக்களுக்கும் உரிமைகளை வழங்குவதற்கான ஓர் அவசியமான கடமை இதுவாகும். அனைத்துலக மனித உரிமை மற்றும் மனிதாபிமானச் சட்டமீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகளுக்குப் பொறுப்புக்கூறலை உறுதி செய்ய நம்பகமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்காதமை உலகளாவிய சட்ட நடவடிக்கைகளுக்கு இன்னும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## நவ.19இல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு–

கடந்த ஒன்றரை வருடங்களாக புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் இம்மாதம் 21ஆம் திகதி புதிய அரசமைப்பின் இடைக்கால அறிக்கை வெளியாகும். இந்த இடைக்கால அறிக்கை கடந்த வருடம் நவம்பர் மாதம் 19ஆம் திகதி உருவாக்கப்பட்ட அறிக்கையாகும்.

அந்த அறிக்கையில் அரசியல் கட்சிகளின் எழுத்து மூல கருத்துக்களும் உள்ளடக்கப்படும். மேலும் வழிநடத்தல் குழு உறுப்பினர்களும் தனது கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அதேபோல் தமிழ்தேசியக் கூட்டமைப்பும் தங்கள் கருத்துக்களை கூறியிருக்கின்றது. அதுவும் இடைக்கால அறிக்கையின் ஓர் அங்கமாக வெளிவரும்.

குறிப்பாக, சமஷ்டி அடிப்படையிலான ஆட்சி முறை அமைய வேண்டும், மதசார்பற்ற நாடாக இருக்கவேண்டும், பௌத்த சமயத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டாலும், ஏனைய மதங்களுக்கு சம உரிமை வழங்கப்படவேண்டுமென கோரியிருக்கிறோம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்த அலகாக இருக்க வேண்டும் என்பன போன்ற பல கோரிக்கைகளும் எம்மால் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும், மாகாண ஆளுநர்களுக்கான அதிகாரங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் கேட்டுள்ளோம்.

இடைக்கால அறிக்கையில் இவ்விடயங்கள் வெளிவரவுள்ளமையோடு, அதற்கு அரசாங்கத்தின் பிரதான கட்சிகள் இரண்டும் ஒப்புதல் வழங்கினால் அடுத்த கட்டம் தொடர்பாக பேசுவதற்கு நாங்கள் இணக்கம் தெரிவிக்கின்றோம்.

எதிர்வரும் 21ஆம் திகதி இடைக்கால அறிக்கை வெளியான பின்னர் அரசமைப்பு ப்பேரவையில் விவாதங்கள் நடைபெறும். அந்த விவாதங்களின் அடிப்படையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முழுமையான அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என்றார். (உ)

## சர்வஜன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்த ஒரு தேர்தல் முறைமையை மாகாண சபைத் தேர்தலிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும் –

வசதியாக அரசமைப்புக்கான இந்த இருபதாவது திருத்தம் கொண்டு வரப்படுகின்றது.

இந்தத் திருத்தம் நிறைவேறுமானால் தற்போது செயலிழக்கவுள்ள கிழக்கு, வட மத்தி மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளின் பதவிக்காலம் மேலும் ஒரு வருடம் நீடிக்கப்படும்.

ஊவா உட்பட 2019 இல் பதவிக் காலம் முடிவுற வேண்டிய மூன்று மாகாண சபைகள் ஓராண்டு முற்கூட்டியே – 2018 இல் – கலைக்கப்படும்.

இந்த ஏற்பாடுகள் அடங்கிய அரசமைப்புத் திருத்தமே இப்போது இருபதாவது திருத்தமாக உயர்நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படுகின்றது.

இதற்கு எதிராக பன்னிரண்டு மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்கள் மீதான விசாரணையை நாளை மறுதினம் வரை உயர் நீதிமன்றம் நடத்தும். அதன் பின்னர் உயர்நீதிமன்றின் பரிந்துரை ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும் 19ஆம் திகதி அளவில் அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அடுத்த நாள் இருபதாம் திகதி சபாநாயகர் அந்தப் பரிந்துரையை நாடாளுமன்றில் அறிவிப்பார்.

இந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றினால் போதுமானது என நீதிமன்றம் பரிந்துரைக்குமாயின் அந்தத் திருத்தத்தை அப்போதே சபையில் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையுடன் நிறைவேற்ற அரசு முயலும்.

தமிழ்க்கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழர் முற்போக்குக் கூட்டணி ஆகியவற்றின் ஆதரவு இருப்பதால் இந்தத்திருத்தத்துக்குநாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு பெறுவது சிக்கலானதல்ல என அரசு கருதுகின்றதாம்.

எனினும், மாறாக, இந்த அரசமைப்புத் திருத்தம் மக்களின் வாக்குரிமை சம்பந்தப்பட்டது என்பதால் அதனை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் திட்டவட்டமாகப் பரிந்துரைக்குமானால், இந்த இருபதாவது திருத்தத்தை மேற்கொள்வதையே அரசுத்தரப்பு அடியோடு கைவிட்டு விடும் என விடயமறிந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (உ)

## வன்னி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடாகப் பயணித்துக் கொண்டிருந்த வாகனம் ஒன்றே வேகக் கட்டுப் பாட்டை இழந்து தடம் புரண்டது. இதன்போது அருகில் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் சம்பவத்தில் படுகாயமடைந்தார்.

சுமார் 40 வயதுடைய அந்தப் பெண் தலையில் அடிப்பட்டுப் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில், கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, வவுனியா வடக்கு வவுனியா – மதியாமடு பகுதியில் நேற்றிரவு மோட்டார் சைக்கிள் மோதியதில் இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்தார். துவிச்சக்கர வண்டியில் தனது கணவனைப் பார்ப்பதற்காக தோட்டத்திற்குத் தனது மகளுடன் பயணித்த இளம் தாயொருவர் மீது திடீரென வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியது.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான 26 வயதுடைய சுமன் வனஜா என்ற இளம் தாய் சம்பவ இடத்திலேயே பலியானார். இவருடன் பயணித்த இவரது மகளான ஆறு வயதுடைய கிருத்திகா படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையின் விபத்துப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 16 வயதுடைய மாணவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்த மாணவனிடம் சாரதி அனுமதி பத்திரம் இல்லை என்பது பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாம்.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதம தேர்தல் ஆணையர் மஹிந்த தேசப்பிரிய சில தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தில் கட்சித் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

டிசெம்பரில் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சை நடைபெறுவதால் உள்ளூராட்சித் தேர்தலை ஜனவரியில் ஒரு சனிக்கிழமையன்று நடத்த ஆலோசிக்கப்பட்டது.

ஜனவரி 13 ஆம் திகதி சனிக்கிழமை தைப்பொங்கல் தினமாதலால் அதற்கு அடுத்த சனிக்கிழமை 20 ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்குப் பரிந்துரைக்கப்பட்டது.

தேர்தல் ஆணையகத்தின் மூன்று ஆணையாளர்களும் இனிமேல் கூடி, இது குறித்து பரிசீலித்து தேர்தல் திகதியை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (உ)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து அண்ணளவாக 80 பேருக்கு எயிட்ஸ் நோய் கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 45 பேரளவில் உயிரிழந்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்ட எச்.ஐ.வி. சிகிச்சை பிரிவில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளாகிய 39 பேர் வரையில் சிகிச்சை பெற்று வந்துள்ளனர். அதில் 9 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். ஏனைய 30பேரும் தற்போது யாழ் மற்றும் அனுராதபுரம் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த வருடம் வடக்கு மாகாணத்தில் 6 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளானவர்கள் என பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். அதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஒருவரும் மன்னார் மாவட்டத்தில் இருந்து ஒருவரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 4 பேரும் அடையாளம் காணப்பட்டனர்.

இவர்களில் 63 வயதுடைய ஒருவர், இருவர் 50 தொடக்கம் 60 வயதுக்கு இடைப்பட்டவர்கள், மூன்று பேர் 40 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன் இவர்களில் 3 ஆண்களும், 3 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

மேலும் எச்.ஐ.வி. தொற்று இருப்பதாக அடையாளம் காணப்பட்ட மன்னார் மாவட்டத்தை சேர்ந்த ஒரு நபரும் யாழ். மாவட்டத்தை சேர்ந்த இருவரும் அண்மையில் உயிரிழந்துள்ளனர். இவர்கள் எச்.ஐ.வி. தொற்று ஏற்பட்டு உரிய நேரத்திற்கு சிகிச்சை பெறாத காரணத்தினால் எயிட்ஸ் நோய் தாக்கத்தின் இறுதி நிலையை அண்மித்து சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

மேற்குறித்த தரவுகள் வைத்தியசாலைகளில் பரிசோதனைக்கு வருபவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவலே அன்றி பரிசோதனை மேற்கொள்ளப்படாமல் இன்னும் பலர் எச்.ஐ.வி. தொற்றுக்கு உள்ளாகி இருப்பதற்கு சாத்தியக் கூறுகள் அதிகமாக காணப்படுகின்றன.

எனவே தொற்றுக்கள் பல வகையில் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதால் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவும் எமது எதிர்கால சந்ததியைப் பாதுகாக்கவும் இன்றே பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பது மிக மிக அவசியம் ஆகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை வலியுறுத்தி சைக்கிள் பயணம் ஐந்தாவது நாளைக் கடந்து தொடர்கிறது!







கொழும்பு, செப். 12

தமிழின அழிப்புக்கு சர்வ தேச விசாரணையை வலியு றுத்தி ஐரோப்பிய ஒன்றி யத்துக்கு முன்பாக ஆரம்பிக் கப்பட்ட மனிதநேய சைக்கிள் பயணம் ஐந்தாவது நாளாக நேற்று முன்தினம் அகவணக் கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, ஜேர்மன் நாட்டின் சார்புருக்கன் நகரத்தை கடந்து பிரான்ஸ் நாட்டை நோக்கி பயணித் துள்ளது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற பயணத்தில் வேற்றின சைக்கிள் பயண வீரர்களை சந்தித்து, எமது மனிதநேய சைக்கிள் பயணத்தின் நோக் கத்தை தெளிவுபடுத்தி, துண்டுப் பிரசுரங்களும் வழங் கப்பட்டுள்ளன.

அன்றைய தினம் பிரான்ஸ் கிழக்கு பிராந்திய நகர பிதாக் களையும், மக்க ளையும் சந் தித்த அதே சமயம், மாவீரர் களின் தியாகத்தை சுமந்து இந்த பயணம் தொடர்ந்தது.

மேலும், ஐரோப்பா வாழ் தமிழர்கள் அனைவரும் ஒன்று பட்டு ஓங்கிக் குரல் கொடுப் பதற்காக எதிர்வரும் 18 ஆம் திகதி ஜெனீவா சர்வதேச முச் சந்தியில் முருகதாசன்திடலில் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

லஞ்ச விசாரணை ஆணைக்குழுவுக்கு

## இதுவரை 1,710 முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 12

இந்த வருடத்தின் நிறைவடைந்துள்ள காலப்பகுதிக்குள் ஆயிரத்து 710 முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இந்த முறைப்பாடுகளில் 1,020 முறைப் பாடுகள் மேலதிக விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்றும் சட்டமூலத்தில் தொடர்புபடாத மற்றும் போதியளவு சாட்சியங்கள் இல்லாத 404 முறைப்பாடுகள் மேலதிக விசாரணை செய் யப்படாது எனவும் ஆணைக்குழுவின் தலை வரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சரத் ஜயமான்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் இலஞ்சம் பெற்றமை தொடர்பிலான 3 ஆயிரத்து 964 முறைப்பாடுகளும், 2016 ஆம் வருடத்தில் 3 ஆயிரத்து 450 முறைப்பாடுகளும் கிடைக் கப்பெற்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் கடந்த 8 மாத காலப்பகுதிக்குள் ஆணைக் குழு மூலம் 51 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த வழக்கு தாக்கல்களில் 24 வழக்குகள் நீதிவான் நீதிமன்றத்திலும் 27 வழக்குகள் மேல் நீதிமன்றத்திலும் பதியப் பட்டுள்ளன என்றும் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர்மேலும்தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2014 ஆம் ஆண்டு 64 வழக்குகளும், 2015 ஆம் ஆண்டு 108 வழக்குகளும், 2016 ஆம் ஆண்டு 87 வழக்குகளும் தொடரப்பட் டுள்ளன.

மேலும், இந்த வருடத்தில் நிறைவடைந் துள்ள காலப் பகுதிக்குள் ஊழல் சம்பந்தப் பட்ட சுற்றிவளைப்புக்கள் 29 மேற்கொள் ளப்பட்டுள்ளன.ஊழல் தொடர்பான முறைப் பாடுகளின் பேரில் 26 பேர் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2014 ஆம் ஆண்டு 22 பேரும், 2015 ஆம் ஆண்டு 13 பேரும், 2016 ஆம் ஆண்டு 21 பேரும் ஊழல் தொடர்பில் நீதிமன்றத்தின் முன் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்பட்டனர் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் சரத் ஜயமான்ன மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக் கது.

## ஆயுதம் தரித்த புலிப் போராளிகளும் இலங்கை மக்களே என்கிறார் அமரவீர!

கொழும்பு, செப். 12

சர்வதேசத்தின் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள முன் னெடுக்கப்பட்ட உள்நாட்டு குழப் பத்தில் எமது சகோதர இனத்தை அழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் வடக்கு முதல்வர், மாநாயக்க தேரர் களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு சில கரு த்துக்களை வெளியிட்டிருந் தார்.

இதற்கு பதில் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஆயுதம் திரித்த புலிகளும் இலங்கையின் மக்களே. அவர்



களை அழித்து நாட்டை மீட்டெ டுக்க இந்த போராட்டம் நடை பெற்றது. மாறாக தமிழ் மக்களை இலக்கு வைத்து அல்ல.

இந்த நிலையில் யுத்தத்தை வைத்து சில அரசியல் நகர்வு களை காணக்கூடியதாக உள்ளது. எனினும் தமிழ் மக்களை நாம் விடுதலைப் புலிகள் என குறிப் பிடவில்லை.

வடக்கில் இராணுவம் உள்ள தைப் போன்றே நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இராணு வம் காணப்படுகின்றது. இராணுவத் தின் பங்களிப்பு என்பது யுத்தத் திற்காக மட்டும் அல்ல.

மேலும், தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும், பிரச்சினைகளை ஏற்படுத்தாத வகையிலும் அரசு செயற்படும் எனவும் அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்துள்ளார்.

## ஐந்து மாவட்டங்களில் மண்சரிவு எச்சரிக்கை!

### *700 குடும்பங்கள் வெளியேற்றம்*

தொடர்ந்தும் ஐந்து மாவட் டங்களில் மண்சரிவு ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

கடந்த சில நாட்களாக நாள் டில் நீடித்துள்ள சீரற்ற கால நிலை காரணமாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள் ளது என அந்த நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, காலி, மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 பிரதேச செயலாளர் பிரிவுக ளில் இந்த அபாயம் காணப் படுவதாக அந்த அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த மாவட்டங்களில் சிறிய



அளவிலான சம்பவங்கள் பதி வாகியுள்ள போதிலும் பெரிய சம்பவங்கள் எவையும் இடம் பெறவில்லை என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை யம் அறிவித்துள்ளது.

இதேவேளையில், அதிக மழை காரணமாக இரத்னபுரி, கேகாலை, காலி, மற்றும் களுத்துறை மாவட்டங்களில் சில பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அந்த பகுதியிலிருந்த 700 குடும்பங் கள் வரை பாதுகாப்பான இடங் களுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, நாட்டில் ஏற் பட்டுள்ள சீரற்ற காலநிலை எதிர் வரும் 14 ஆம் திகதி வரையில் நீடிக்கும் என வளிமண்டல வியல் திணைக்களம் தெரி வித்துள்ளமை குறிப்பிடத்தக் கது. (க)



சுப்பிரமணிய பாரதியாரின் 95ஆவது நினைவுநாள் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். *(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)*



முன்னாள் யாழ். மாநகர முதல்வர் பொன்.சிவபாலனின் நினைவு நிகழ்வுகள் நேற்றுக் காலையில் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# மீண்டும் மீன் ஏற்றுமதி

கொழும்பு, செப். 12

பதப்படுத்தப்பட்ட மீன் வகைகள், முதன் முறையாக இலங்கையில் இருந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் தொடக்கம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட உள்ளன.

மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மட்டக்குளியில் இதற்கென விசேடமாக, 6 கோடி 50 லட்சம் ரூபா செலவில் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அறுபத்தேழு வருடங்களுக்கு முன்னர் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் நிறுவப்பட்ட போதிலும், அண்மைக் காலம் வரை பெரும் நட்டத்திலேயே அது திண்டாடியது.

எனினும் இந்த ஆண்டில், 7 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான வருமானத்தை, புதிய நிர்வாகத்தின் உகந்த செயற்பாடுகளால் பெற்றுக்கொள்ள முடிந்ததாகவும் அமைச்சர் கூறினார்.

மீன்வகைகளை ஐரோப்பிய நாடுகள் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்து வருகின்றன என்றும் அமைச்சர் தகவல் தெரிவித்துள்ளார். (அ)

# போரினால் பாதிப்புற்ற 2 குடும்பங்களுக்கு ஐங்கரநேசனின் நிதி ஒதுக்கீட்டில் வீடு

## நேற்று நல்லூரில் அடிக்கல் நடும் வைபவம்





முன்னாள் விவசாய அமைச்சரும் வடமாகாண சபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசனுக்கு ஒதுக்கப்பட்ட மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து போரினால் பாதிக்கப்பட்ட இரண்டு குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாகாணசபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களால் பரிந்துரைக்கப்படும் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கென குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியாக ஆண்டுதோறும் 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வருகிறது. இந்நிதிக்கு மேலதிகமாக, இந்த ஆண்டு பின்தங்கிய மற்றும் தனித்து விடப்பட்ட கிராமங்களுக்கான நிதி ஒதுக்கீடாக ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா இருபது லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொ. ஐங்கரநேசன் தனக்கு மேலதிகமாக ஒதுக்கப்பட்ட இந்த இருபது லட்சம் ரூபாவையும் போரினால் பாதிக்கப்பட்ட இரண்டு வீடற்ற குடும்பங்களுக்கு தலா 10 லட்சம் ரூபா என்று பகிர்ந்து ஒதுக்கீடு செய்துள்ளார். வலிமேற்கு மற்றும் நல்லூர் பிரதேச சபைஎல்லைக்குள் இருந்து தெரிவு செய்யப்பட்ட இரு குடும்பங்களில் நல்லூரைச் சேர்ந்த குடும்பத்துக்குரிய வீட்டுக்கான அடிக்கல்லை நேற்று பொ.ஐங்கரநேசன் சம்பிரதாயபூர்வமாக நாட்டி வைத்தார்.

அடிக்கல் நாட்டும் இந்நிகழ்ச்சியில் நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் சு.சுதர்ஜனும் கலந்து கொண்டிருந்தார். வீட்டின் கட்டுமானப் பணிகள் உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஊடாகவே மேற்பார்வை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இனிமேல் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம் பங்குபற்றாதாம்

## பொறியியலாளர் சங்கம் அப்படி முடிவெடுத்துள்ளமையால்

யாழ்ப்பாணம்,செப்.12

அரசியல் தலைமைகளால் நடத்தப்படும் கூட்டங்களில் தம்மால் கலந்து கொள்ள முடியாது என பொறியியலாளர் சங்கம் தீர்மானித்துள்ளதால் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்ள முடியாதுள்ளதாக மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம் வவுனியா மாவட்டச் செயலகத்துக்கு அறிவித்துள்ளது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்று வரும் நிலையில் நீர்ப்பாசனத் திணைக்களம் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளது.

அரசியல் தலைமைகளால் நடத்தப்படும் கூட்டங்களில் கலந்துகொள்வதில்லை என இலங்கைப் பொறியியலாளர் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளதால், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது. அத்துடன் முன்னேற்ற அறிக்கையையும் சமர்ப்பிக்க முடியாதுள்ளது என மத்திய நீர்ப்பாசனத் திணைக்களம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தலை கவனத்தில் எடுத்த இணைத் தலைவர்கள் இது அரசியல் கூட்டம் இல்லை எனவும் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பாக இடம்பெறும் கூட்டம் எனவும் அதனால் அவர்கள் கலந்துகொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

வட மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில் –

அவர்கள் அரச உத்தியோகத்தர்களாக உள்ளமையினால் அரசின் செயற்றிட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் அவர்கள் அரச தொழிலை உதாசீனம் செய்பவர்களாகக் கருதப்படுவர் எனத் தெரிவித்தார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு இத்தகைய கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கடிதம் அனுப்புமாறு இணைத் தலைவர்களால் பணிக்கப்பட்டது. (உ)

# உணவு உற்பத்தி மறுமலர்ச்சி குறித்து ஆராய்வு



கொழும்பு, செப். 12

ஒக்ரோபர் மாதம் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய உணவு உற்பத்தி மறுமலர்ச்சி வாரம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்றது.

தேசிய உணவு உற்பத்தி மறுமலர்ச்சி வாரம் ஒக்ரோபர் 05 – 10 வரையான காலப்பகுதியில் இடம்பெறவுள்ளது. விவசாயத் துறை மற்றும் அதனோடிணைந்த அமைச்சுக்கள், திணைக்களங்கள், விவசாயிகள், இளைஞர்கள், மாணவர்கள், அரச, தனியார் தொழில்முயற்சியாளர்கள் மற்றும் மாகாண சபைகளின் நேரடி பங்களிப்புடன் நாடு முழுவதும் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

ஒக்ரோபர் 05 – விவசாயிகள் தினம், ஒக்ரோபர் 06 – மாணவர்கள் தினம், ஒக்ரோபர் 07 – கால்நடை வள தினம், ஒக்ரோபர் 08 – தொழில்முயற்சியாண்மை தினம், ஒக்ரோபர் 09 – மீனவர் தினம், ஒக்ரோபர் 10 – அரச ஊழியர்கள் தினம், ஒக்ரோபர் 11 – நீர் தினம் என்றவாறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அமைச்சர்களான துமிந்த திசாநாயக்க, மகிந்த அமரவீர, பீ.கரின், விஜித் விஜித முனி சொய்ஸா, அகில விராஜ் காரியவசம், மாகாண அமைச்சர்கள், ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ மற்றும் அரச அலுவலர்களும் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.